பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 07 வியாழக்கிழமை (22-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:361

# ஐ.தே.கட்சி அரசில் ஈ.பி.டி.பியை சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை!

## ரணில் திட்டவட்டமாக அறிவிப்பு





கொழும்பு,நவம்பர்22

**பொதுத் தேர்தலின் பின்னர் அமையப்போகும் ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய அரசில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. எனவே புதிய அரசில் வடக்குப் பிரதேசத்தின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பாக நியமிக்கப்படவிருக்கும் எமது யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரனின் கைகளைப் பலப்படுத்துங்கள்.**

**- இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.**

"தேர்தலின் பின்னர் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஈபிடிபி. அதில் இணையும். ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்தாலும் நாம் அந்த அரசில் இணைவோம்." - என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததற்குப் பதிலளிக்கும் விதமாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பத்துடன் ஐதேக ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈ.பி.டி.பியின் அறிவிப்புக்கு தனது எதிர்ப்பை ஐ.தே.கட்சி வெளிப்படுத்திக்கொள்கின்றது.

தனது நிலையைக் காப்பாற்றிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியைக் கொல்ல விடுதலைப் புலிகள் சதியாம்!

### அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு,நவ.22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை படுகொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் மீண்டும் சதி செய்து வருவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியை படுகொலை செய்வது தொடர்பாக புலிகளின் தலைவர்களில் ஒருவரான கரிகாலன் தெற்கில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் நடத்திய உரையா

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஓரிரு தினங்களில்

## ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புவார்

கொழும்பு,நவ.22

லண்டனில் தலைமறைவாக வாழும், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இன்னும் ஓரிரு தினங்களில் நாடு திரும்புவார் என்று ஜே.வி.பி. வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நாடு திரும்பியதும் சோமவன்ஸ ஜே.வி.பி. சார்பில் பொதுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி அங்கு சோமவன்ஸவைச் சந்தித்துப் பேசியிருந்தார். அதன பின்னர் சோமவன்ஸ லண்டனில் இருந்து இலங்கை வருவதற்கான ஒருவழி 'விசா'வை லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் வழங்கியிருந்தது.

அதனை அடுத்து சோமவன்ஸ உடன் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பின்னர் அவர் நாடு திரும்பமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது அவர் நாடு திரும்புவதை ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (ம)

### ஷெல் தாக்குதல்களைக் கண்டித்து

## ஏறாவூர் பொலீஸ் நிலையம் முன் நேற்று பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,நவ.22

ஏறாவூரில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்களில் 11வயதுச் சிறுவன் உட்பட ஐந்து பொதுமக்கள் உயிரிழந்தமை மற்றும் ஒன்பது பொதுமக்கள் காயமடைந்தமை ஆகியவற்றால் சீற்றமடைந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள், நேற்று ஏறாவூர் பொலீஸ் நிலையத்துக்கு முன்னால் ஆர்பாட்டம் நடத்தினர்.



இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூவரின் சடலங்களை பிரேதப் பெட்டியில் வைத்து இறுதி ஊர்வலமாக எடுத்துவந்த பொதுமக்கள், நேற்று மாலை 5 மணியளவில் சுமார் ஒரு மணி நேரம் பிரதான பாதையில போக்குவரத்தைத் தடைசெய்தனர்.

ஊர்வலத்தில் சென்றோர் ஆத்திரத்துடனும் சீற்றத்துடனும் காணப்பட்டனர்.

மேற்படி ஷெல் தாக்குதலில் உடல் சிதறிப் பலியான பெண், செல்வ நாயகம் போகநாயகி (வயது 36) எனத் தெரியவந்துள்ளது. வீட்டில் பூஜை அறையில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தபோது அந்த அறைக்குள் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு கட்சிகளுக்குமிடையே சங்கரத்தையிலும் மோதல்!

யாழ்ப்பாணம்,நவ.22

வட்டுக்கோட்டை - சங்கரத்தைச் சந்தியிலும் ஈபிடிபி. ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்று நண்பகல் மோதல்கள் இடம்பெற்றன. ஆகாயத்தை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மோதலில் ஈபிடிபி. உறுப்பினர் ஒருவரின் மண்டை உடைந்தது.

பெருங்கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக படையினரும் வான் நோக்கி வேட்டுக்களைத் தீர்க்க வேண்டி ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்தும் இரு தரப்பிலிருந்தும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியிடப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. - ஐ.தே.க. ஆதரவாளர்கள் நேற்று யாழ்நகரப் பகுதியில் மோதல்!

### கார் அடித்து நொறுக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில ஈ.பி.டி.பி. மற்றும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களிடையே மோதல் இடம்பெற்றது.

ஐ.தே.கட்சி பிரசாரப் பிரிவினரின் கார் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டது. அதிலிருந்த தொண்டர்கள் நையப்புடைக்கப்பட்டனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு பின்னர் விரைந்த யாழ். பொலீஸார் விசாரணைகளை நடத்தினர்.

தாக்குதலுக்கு உள்ளான கார், தாக்குதல் நடத்தியோர் வந்ததாகக் கூறப்படும் 'பிக்-அப்' வாகனம் என்பன பொலீஸாரால் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் மூவரை பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். பலரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

ஐ.தே.க. ஆதரவாளர்களின் காரில் இருந்தது என்று தெரிவித்து ஈ.பி.டி.பி.தரப்பினரால் வாள் ஒன்று பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து இரண்டு தரப்பினரும் ஒன்றுக்கொன்று முர

(02ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரம் நேற்று ஆரம்பம்!

இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் பகுதிகளில் மாவீரர் வாரம் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

எதிர்வரும் 27ஆம் திகதிவரும் மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள் இந்த வாரத்தில் நடைபெற உள்ளன. பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மாவீரர்தின ஏற்பாடுகளில் உணர்வுபூர்வமாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில், வன்னிப் பிரஜைகள் குழு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் -

எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலம் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு முடிவு ஏற்படப்போவதில்லை. எனவே அந்தப் பொதுத் தேர்தலைவிட மாவீரர் தினத்தையே மக்கள் அதிக ஈடுபாட்டுடன் எதிர்பார்த்துள்ளனர்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு

மக்களின் வாழ்வுக்கு முன்னுரிமை வழங்கி....
எக்காலமும் இம்மண்ணில் வாழ்ந்திடும்....
உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கே உங்கள் வாக்கு

வீணையே உங்கள் தெரிவு! சேவையே எங்கள் இலக்கு!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



X

# அரச ஊழியர்களின் வாக்குரிமையை தடுப்பது மனித உரிமை மீறலாகும்

## மகேஸ்வரனின் பேட்டிக்கு ஈ.பி.டி.பி. பதில்

யாழ்ப்பாணம்,நவ.22

"அரசு ஊழியர்களின் வாக்குரிமையை அவர்கள் பிரயோகிக்க விடாது தடுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்" - என்று ஈ.பி.டி.பி. கட்சி தெரிவித்துள்ளது. ஐ.தே. கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் கடந்த செவ்வாயன்று தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒவ்வொருவருக்கும் தாங்கள் விரும்பும் கட்சியை ஆதரிப்பதற்கும் அதற்காகப் பிரசாரம் செய்வதற்கும் பூரண உரிமை உண்டு. இதனை எவராவது மறுப்பார்களாயின் அல்லது அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்கள் மூலம் தடுப்பார்களாயின் அது சம்பந்தப்பட்டவர்களின் ஜனநாயக விருப்புரிமையை மீறும் அப்பட்டமான அடாவடித்தனமாகும்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான திரு. மகேஸ்வரன், அபிவிருத்தித் தொண்டர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள் போன்ற அரசாங்க ஊழியர்கள் கட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது எனவும் -

அவ்வாறு ஈடுபடுபவர்கள் கண்காணிப்புக்கு உள்ளாகுவார்கள் எனவும் -

அவர்களது தொழில் வாய்ப்புக்கள் பறிக்கப்படும் எனவும் -

மிரட்டுவதும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களாகும்.

இவ்வாறான மனித உரிமை மீறலின் உச்சக் கட்டமாகத் தேர்தல் வாக்களிப்புக்கு முந்திய தினம் முதல் வாக்களிப்பு முடியும் வரையான நேரத்தை செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் கழிக்கும்படி அறிவுரை கூறுவது கண்டனத்துக்குரியதாகும். மக்கள் மத்தியில் வாழும் குறிப்பிட்ட ஒருசாரார் வாக்களிப்பில் ஈடுபடுவதைத் தடுக்கும் கபடத்தனமான உள்நோக்கமுடையதாகும்.


### அச்சுறுத்தல்கள் மூலம் அடக்கமுடியாது

இத்தகைய மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் செயற்பாடுகளுக்கு பொலீஸார் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றோம். இத்கைய மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் விடும் வார்த்தைப் பிரயோகங்கள் மூலமாக மகேஸ்வரன்கள் எமது மக்களை அடக்கிவிடலாம் என எதிர்பார்ப்பது மூடத்தனமாகும். ஏனெனில் சீறிப்பாயும் குண்டுகளுக்கும், சிதறிப்பறக்கும் எறிகணை வீச்சுக்களுக்கும், மழை எனப் பொழிந்த விமானக் குண்டுத் தாக்குதல்களுக்கும்கூட அஞ்சாமல் இந்த மண்ணில் நிரந்தரமாக வாழும் எமது மக்கள், வெறும் வார்த்தைகள் கண்டு மருண்டுவிடப்போவதில்லை.

### நட்டாற்றில் மகேஸ்வரன் தவிப்பது நிச்சயம்

தெளிவான - எந்தக் கொள்கையும் இல்லாமல் - யானையின் தோளில் ஏறியிருந்தபடி புலிகளைச் சமாளிக்க முயலும் இரண்டு கெட்டானான மகேஸ்வரனின் கொள்ளை லாபமடி அரசியல் எமது மக்களுக்குத் தெரியாததும் அல்ல. இரண்டு தோணியில் கால் வைக்கும் எவரும் நட்டாற்றில் தவிப்பது நிச்சயம்.

யானையின் மீது அமர்ந்து புலிச் சவாரி செய்வது, நிச்சயமாக நல்ல பயனைப் பெற்றுக்கொடுக்கப்போவதில்லை என்பதை மகேஸ்வரன் உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை. ஆனால் அப்போது அவருக்காகப் பரிதாபப்பட எவரும் முன்வரப்போவதில்லை என்பது சாத்தியம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தாக்குதலுக்கு இலக்கான காரை மகேஸ்வரன் மற்றும் பொலீஸார் பார்வையிடுகின்றனர்.



இலக்கத் தகடு இல்லாத இந்தப் 'பிக் - அப்'பில் வந்தோரால்தான் பிரச்சினையே ஆரம்பமானது என்கிறார் தி.மகேஸ்வரன். 'பிக் - அப்'பை பொலீஸார் யாழ். பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தபோது அதன் முன்னால் இருந்தும் பின்னால் இருந்தும் எடுக்கப்பட்ட படங்கள். பொலீஸ் நிலையப் பெயர்ப்பலகையும் தெரிகின்றது.




கார் தாக்குதலுக்கு இலக்கான இடத்தில் பொதுமக்கள், பொலீஸார் முன்னிலையில் இலக்கத்தகடு இன்றி ஓடித்திரியும் 'பிக் - அப்' வாகனம். தாக்குதலுக்கு இலக்கான காரும் தெரிகின்றது.

*(படங்கள் : ஐ.தே. கட்சி யாழ். பிரிவு)*

## சம்மாந்துறையில் பதினோராவது நாளாகவும் தொடரும் தொண்டர் ஆசிரியர் உண்ணாவிரதம்

அம்பாறை,நவ.22

சம்மாந்துறை வலயத் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் பதினோராவது நாளாகவும் தொடர்கிறது. இப்போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இத்தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 12ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். எனினும் கடந்த 20ஆம் திகதி முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமாக அது தொடர்ந்து வருகிறது. சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகம் எதிரே இப்போராட்டம் நடைபெறுகிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் விடுத்த கோரிக்கையை அடுத்தே சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டமாக அது மாற்றப்பட்டது.

சங்கத் தலைவர் ஏ.ஏ.ஜாபிர் தலைமையில் நடைபெற்றுவரும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் அரசியல்வாதிகளோ, கல்வித் திணைக்கள உயரதிகாரிகளோ, அரசோ எவ்வித சாதகமான முடிவையும் இதுவரை வழங்க முன்வரவில்லையென செயலாளர் வேந்தன் கவலை தெரிவித்தார்.

எனினும் இவர்களது விடயத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அக்கறை செலுத்தி வருகிறார்.

வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கங்களின் இணைப்பாளர் இரா.ஜெயமோகன் இந்த ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டுமென அறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கமும் இப்போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸலிம் ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் ஏ.எம்.மீராசாகிப், வடக்கு - கிழகரு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் சம்மாந்துறை கல்வி வலயத் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு கோரியுள்ளார்.

(ம)

## திருமலையிலும் உண்ணாவிரதம்

நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி திருகோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் முதல் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

'திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

மூதூர், தம்பலகாமம், குச்சவெளி, சாம்பல்தீவு, நிலாவெளி, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் கடமையாற்றும் நூற்றுக்கும் அதிகமான தொண்டர் ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ம-7-145)

### மலையகத்தில்

## இலக்கத் தகடுகள் இல்லாத வாகன நடமாட்டம் அதிகரிப்பு

### சந்திரசேகரன் முறையீடு

கொழும்பு,நவ.22

மலையகத்தில் இலக்கத்தகடுகள் அற்ற வாகனங்களதும், இனந்தெரியாதவர்களதும் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளதாக 'மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபரிடமும் தேர்தல் ஆணையாளரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

வாகனங்களில் இலக்கத்தகடுகள் அகற்றப்பட்டு, கார்ட்போட்டுக்களிலும் வெள்ளைக் காகிதங்களிலும் இலக்கங்கள் எழுதி ஒட்டப்பட்டுள்ளன.' இந்த வாகனங்களில் பெரும்பாலானவற்றில் அரச முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அறிமுகமில்லாதவர்களே பிரயாணம் செய்கின்றனர்.

கினிகத்தேனை, ஹட்டன், தலவாக்கொல்லை, விந்துலை, பூண்டுலோயா, நுவரெலியா ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டங்களுக்கும் இடையிலான வீதிகளிலேயே இந்த வாகனங்கள் திரிகின்றன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ம)

### ஐ.தே.கட்சி வேட்பாளர் நீதிமன்றில் சரண்

ஆனமடுவைப் பொலீஸாரை கடமை செய்யவிடாது தடுத்தமைக்காகத் தேடப்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் பாலித்த ரங்கபண்டார நேற்று புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

மாவட்ட பதில் நீதிவான் ஏ.ஏகநாதன் சந்தேகநபருக்கு ஒரு வழக்கில் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையும் ஒரு லட்சம் ரூபாய் சரீரபிணையும் விதித்தார். அரச வாகனங்களைச் சேதப்படுத்திய வழக்கில் இன்று 22ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ம)

## ஈ.பி.டி.பி. - ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

### ஈ.பி.டி.பி. அறிக்கை

ஈ.பி.டி.பி. இச்சம்பவம் குறித்து நேற்று மாலை விடுத்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளிக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இன்று நண்பகல் அளவில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் திரண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசார பதாகைகளை தாங்கியபடி வந்த ஊர்திகள், மக்கள் திரளை ஊடறுத்துச் செல்ல முயன்றன. மகேஸ்வரனுக்கு ஆதரவான பிரசார பதாகைகளை தாங்கிய ஊர்திகளில் வந்தவர்கள் தூஷண வார்த்தைகளால் பொதுமக்களைக் கடுமையாக ஏசியதுடன், வாள்களை எடுத்துத் தாக்கவும் முயன்றனர். இத்தருணத்தில் கூடியிருந்த பொதுமக்கள் மகேஸ்வரனின் குண்டர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் வாள்களையும் பறித்தெடுத்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் தலையிட்ட ஈ.பி.டி.பியின் தொண்டர்கள் பொதுமக்களை சாந்தப்படுத்தியதுடன், மகேஸ்வரனுக்கு சார்பான குண்டர்களின் அத்துமீறிய அடாவடித்தனங்கள் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். பொதுமக்களால் பறித்தெடுக்கப்பட்ட வாள்கள் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.தே.கட்சித் தரப்பு கூறும் தகவல்கள்

இச்சம்பவம் தொடர்பாக ஐ.தே. கட்சியின முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் கூறியதாவது:-

எமது ஒரு கார் மட்டுமே பிரசாரப் பணிக்காக அவ்வேளை ஸ்ரான்லி வீதிக்குச் சென்றது.

அந்தக் காரில் ஒலிபெருக்கி பூட்டப்பட்டிருந்தது. நாவாந்துறை, கொட்டடிப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் கூட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது. ஆனால் ஸ்ரான்லி வீதியில் ஒலிபெருக்கிப் பிரசாரம் ஏதும் செய்யவில்லை. அப்பகுதியில்' உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் எமது ஆதரவாளர்கள் சென்று எமது துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஈ.பி.டி. பியினர் - இலக்கத்தகடு இல்லாத - நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமானது என்று கருதப்படுகின்ற - 'பிக்-அப்' வாகனம் ஒன்றில் வந்திறங்கி, எமது பிரசாரக் காருக்குள் தங்களது கட்சித் துண்டுப் பிரசுரங்களைப் பலவந்தமாகத் திணித்தனர். காரில் இருந்த எமது தொண்டர்கள் அவற்றை வெளியே தூக்கி வீசினர்.

அதை அடுத்து மோட்டார் சைக்கிளில் அவ்விடத்துக்கு விரைந்து வந்த மற்றும் சில ஈ.பி.டி.பியினர் காரில் இருந்தோரைத் தாக்கியதோடு காரையும் அடித்து நொறுக்கினர்.

எமது காரில் வாளோ, ஆயுதங்களோ ஏதும் இருக்கவில்லை. எமது தொண்டர்கள் திருப்பித் தாக்கவுமில்லை.

இந்தச் சம்பவத்தை ஸ்ரான்லி வீதியில் இருக்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள், அப்போது வீதியில் நின்ற பொதுமக்கள் அனைவரும் நேரடியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களே இந்த அடாவடித்தனத்துக்கு நேரடிச் சாட்சிகள்.

இலக்கத் தகடு இல்லாமல் அந்த இடத்துக்கு வந்து அட்டகாசம் புரிந்த 'பிக்-அப்' வாகனம் எம்மால் பொலீஸாருக்கு அடையாளம் காட்டப்பட்டு, அது பொலீஸாரினால் யாழ். பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பான ஆரம்ப விசாரணைகளைப் பொலீஸார் ஸ்ரான்லி வீதியில் நடத்திக் கொண்டிருந்த சமயம் கூட, இலக்கத்தகடு இல்லாத வேறு 'பிக்-அப்' வாகனங்களில் ஈ.பி.டி.பியினர் அந்தப் பகுதியில் ஓடித்திரிந்தனர்.

அவற்றையெல்லாம் எமது புகைப்படப்பிடிப்பாளர் படம் பிடித்துள்ளார். உண்மையை மக்கள் அறிவதற்காக இந்தப் புகைப்படங்களை ஊடகங்களுக்கு வழங்குகின்றோம் - என்றார் மகேஸ்வரன். (உ-6-10-15-173)

### பலவித கருத்து முரண்பாடுகளின் மத்தியில்

# ஆப்கான் எதிர்காலம் தொடர்பாக அடுத்தவாரம் ஜேர்மனியில் பேச்சு!

## ஐ.நாவின் ஏற்பாட்டில் நடக்கிறது

காபூல்,நவ.22

ஆப்கானிஸ்தானில் உடனடியாக இடைக்கால அரசொன்றை அமைப்பது தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை ஜேர்மனியில் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா.பிரதிநிதி லக்தார் பிராஹி தெரிவித்துள்ளார். ஆப்கான் இனக்குழுக்களிடையே பலத்த கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ள நிலையில் பேர்லின் நகரில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

முதலில் சகல இனக்குழுக்களின் பிரதிநிதிகளும் அடங்கிய பெரியளவிலான தற்காலிக சபை ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் -

பின்னர் அந்தச் சபை இடைக்கால நிர்வாக அமைப்பொன்றைத் தெரிவு செய்யும் என்றும் -

இந்தத் திட்டம் குறித்தே பேர்லின் பேச்சில் ஆராயப்படவுள்ளதாகவும் -

ஐ.நா.பிரதிநிதி தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் ஆப்கானிஸ்தானின காபூல் நகரிலேயே நடத்தப் படவேண்டுமென்று வடக்குக் கூட்டணி வற்புறுத்திவருகின்ற போதும், ஜேர்மனியில் இதனை நடத்துவது உறுதி செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேர்லின் கூட்டம் முடிவடைந்த பிறகு காபூலில் பேச்சு நடத்த ஐ.நா. உறுதியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவும், ஐநாவும் நெருக்குதல் கொடுத்ததையடுத்து வடக்குக் கூட்டணியும், பெரும்பான்மை ஆப்கான் இனக்குழுக்களும் தங்களுக்கே தனி அதிகாரம் என்ற கோரிக்கையை விட்டுக்கொடுத்து பேர்லின் பேச்சில் கலந்துகொள்ள இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சு ஜேர்மனியில் நடக்கும் காலகட்டத்தில் ஆப்கானிஸ்தான் மீதான தனது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை அமெரிக்கா நிறுத்தி வைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம், குண்டூஸ் நகரில் வடக்குக் கூட்டணியின் முற்றுகையில் சிக்கியுள்ள சுமார் 2000 தலிபான்களையும் சரணடையச் செய்து இரத்தக்களரி ஏற்படாமல் தடுக்க அமெரிக்கா கடும் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளது. பேச்சு ஆரம்பிக்கப் படவுள்ள எதிர்வரும் திங்கட்கிழமையின் முன்பாக குண்டூஸ் நகர விவகாரம் தீர்க்கப்பட்டுவிடவேண்டும் என்பதில் அமெரிக்காவும், ஐநாவும் கவனம் செலுத்திவருவதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்குப் பிறகு அமையும் அரசு, விரிவான அடிப்படையிலும், பல இனத்தவர்கள் பங்கேற்பதாகவும், பிரதிநிதித்துவ முறையில் உள்ளதாகவும் அமைய வேண்டும் என்று சர்வதேச சமூகம் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## ஆட்சி, அதிகாரக் கனவில் மோதும் இனக் குழுக்கள்

காபூல்,நவ.22

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசொன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில், தமது செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சியில் ஆப்கான் இனக் குழுக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

வடமேற்கு ஆப்கானிஸ்தானின் ஹெரோஸ் நகரில், கிளர்ச்சிக் குழுத் தலைவரான இஸ்மாயில் ஹெரான் தலைமையிலான ஆயுதக் குழுவினர், தமது எதிரிகளான ஆயுதம் ஏந்திய 'ஷியா' முஸ்லிம் குழுவினரை விரட்டியடித்து அப்பகுதியில் தமது பிடியை இறுக்கியுள்ளனர்.

இது போன்றே தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இனக் குழுக்கள் ஒன்றையொன்று தாக்கி தத்தமது நிர்வாகத்துக்குள் அப்பகுதிகளை கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

உத்தேச இடைக்கால அரசில் தமது பிரதிநிதித்துவத்தை அல்லது ஆதிக்கத்தை அதிகரிக்கும் ஆவலே இந்த மோதல்களுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஆப்கானின் பாதுகாப்பு ஸ்திரத் தன்மைக்கு இனக் குழுக்களிடையேயான இந்த மோதல்கள் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால், இவற்றைத் தடுக்க அமைதிப்படை ஒன்றை அங்கு நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை தற்போது வலுத்துவருகிறது. (ஓ-9)

### புஷ் வழங்கிய ரமழான் விருந்து



தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், இஸ்லாமிய நாடுகளின் முக்கியஸ்தர்களுக்கு அமெரிக்க அதிபர் புஷ் பாரம்பரிய 'ரமழான் விருந்தளித்தார். அங்கு இஸ்லாமிய தலைவர் இமான அப்துல்லா மொஹமட் கபோஜ் உரையாற்றுவதை அதிபர் புஷ் செவிமடுப்பதைப் படத்தில் காணலாம். ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் முஸ்லிம்களுக்கு எதிரான யுத்தமல்ல என்பதைக் காட்டும் புஷ்ஷின் பிரயத்தனங்களில் இந்த ரமழான் நோன்பு விருந்தும் ஒன்று என்று கருதப்படுகிறது.

## இஸ்லாமிய தீவிரவாதத் தலைவர் பிலிப்பைன்ஸில் போர்ப் பிரகடனம்!

### இராணுவ நிலைகள் கைப்பற்றப்பட்டன

மணிலா,நவ.22

பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக அந்நாட்டு இஸ்லாமிய தீவிரவாதத் தலைவர் நூர் மிஸுரி போர்ப் பிரகடனம் செய்துள்ளார். இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தென்பகுதியில் மிஸுரியின் மோரோ தேசிய விடுதலை முன்னணி இராணுவக் காவலரண்களைக் கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக- இஸ்லாமியர் உரிமைகளை காப்பதற்காக - 24 ஆண்டுகளாக மோரோ முன்னணி, கெரில்லாப் போராட்டம் நடத்தி வந்தது. 1996இல் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அடுத்து மோரோ கெரில்லாக்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டனர். நூர் மிஸுரி இஸ்லாமிய சுயாட்சி பிரதேசத்தின் ஆளுநரானார்.

இந்த நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி இஸ்லாமிய சுயாட்சிப் பிரதேசத்தில் தேர்தல் நடத்த பிலிப்பைன்ஸ் அரசு தீர்மானித்துள்ளது.

ஆளுநர் பதவியிலிருந்தும் தன்னை அகற்றுவதற்காகவே இந்தத் தேர்தல் நடத்தப்படுவதாக மிஸுரி தரப்பு கருதுகிறது. இதனையடுத்தே மிஸுரி பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்துள்ளார்.

மோரோ முன்னணிக்கு மற்றொரு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான அபுசாயப்பும் உதவுவதாகவும் -

இராணுவத்தில் முன்னர்இணைந்து கொண்ட முன்னாள் மோரோ கெரில்லாக்களுடன் இணைந்து தெற்கு இராணுவத்தலைமையகம் மீது அவர்கள் தாக்குதல் நடத்தி வருவதாகவும் - பிலிப்பைன்ஸ் அரசு கூறுகிறது.

மோரோ முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற குழு ஒன்றையே பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா, அரோயா ஆதரிக்கிறார். ஆகவே நடைபெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்று முன்னதாகவே மிஸுரி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலிபானின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மீண்டும் கொள்ளையர் அட்டகாசம்!

### பொழுதுபோக்குகளும் விரைவாக அறிமுகம்

குவெட்டா,நவ.22

ஆப்கானிஸ்தானில் -தலிபான்களின் வீழ்ச்சியையடுத்து வழிப்பறிக் கொள்ளையர்களின் அட்டகாசங்கள் வீதி களில் தொடங்கிவிட்டன. இதனால் நிவாரணப் பொருள்கள் விநியோகத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன்னர், ஆப்கான் நெடுஞ்சாலைகளில் கொள்ளையர் அட்டகாசம் அதிகமாக இருந்தது. தலிபான்கள் அதனை அறவே தடுத்திருந்தனர். பெண்கள், குழந்தைகள் கூட எங்கும், எப்போதும் தனியாகச் சென்று வரக் கூடியதாக இருந்தனர்.

ஆனால் இப்போது மீண்டும் கொள்ளையர்கள் அச்சமின்றித் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

மரங்கள், கற்பாறைகள் போன்றவற்றை வீதிகளின் குறுக்கே போட்டு வாகனங்களைத் தடுக்கும் கொள்ளையர்கள், அவற்றில் உள்ள பொருள்களையும், பயணிகளிடமுள்ள பணம் மற்றும் உடைமைகளையும் அபகரித்துச் செல்கின்றனர். எதிர்ப்புக் காட்டுபவர்களை கொள்ளையர்கள் கொன்றும் விடுகின்றனர்.

கொள்ளையர்களால் இரண்டு லொறிச் சாரதிகள் கொல்லப்பட்டதையடுத்து மஷார் ஏ ஷெரீபுக்கான நிவாரணப் பொருள் விநியோகத்தை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

இதைத் தவிர, சாரதிகளின் உயிர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையில், பஸ், லொறிப் போக்குவரத்துகளை வாகனச் சொந்தக்காரர்கள் நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலை, ஆப்கான் மக்களிடையே மீண்டும் தலிபான் ஆதரவுப் போக்கை அதிகரிக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

இதனிடையே, தலிபான்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆப்கான தொலைக்காட்சி சேவை 5 ஆண்டுகளின் பின்னர், கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஐந்தே நாள்களில் தொலைக்காட்சி நிலையம் புனரமைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆப்கானில் தொலைக்காட்சி உட்பட பொழுதுபோக்கு அம்சங்கள், நிவாரணப் பணிகளைவிட வேகமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ)

## பின்லேடனைப் பிடிப்பவருக்கு 2.5 கோடி டொலர்கள் பரிசு

வாஷிங்டன்,நவ.22

ஒஸாமா பின்லேடனை பிடிப்பவர்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் டொலர்கள் பரிசாக வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

வானொலி ஒலிபரப்பு மூலமும், விமானங்களிலிருந்து வீசப்படும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் இந்த அறிவிப்பு ஆப்கானிஸ்தானிய மக்களிடையே பரப்பப்படுகிறது.

இதேவேளை இந்தப் பரிசு அறிவிப்பு ஆப்கானில் உள்ள அமெரிக்க இராணுவத்தினர் மத்தியிலும் பரபரப்பையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வாய்மூலம் இந்தச் செய்தி அவர்களிடையே வேகமாகப் பரவி வருகிறது. பின்லேடனை பிடித்து விட வேண்டும் என்ற வேகம் இதனால் அமெரிக்கச் சிறப்பு அதிரடிப்படையினரிடையே தோன்றியுள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, பின்லேடன் மறைந்திருப்பதாக நம்பபடும் குகைகள் மற்றும் சுரங்கப் பாதைகளுக்குள் ஆப்கானிஸ்தான் மக்கள் நுழைந்து, ஊர்ந்து, தவழ்ந்து சென்று பின்லேடனைத் தேடுவார்கள் என்று தாம் நம்புவதாகப் 'பெண்டகன்' பேச்சாளர் தெரிவித்தார். (ஓ)

## டெண்டுல்கர் உட்பட 6 வீரர்களுக்கு விதிகளை மீறியதற்காகத் தண்டனை

### சர்வதேச கிரிக்கெட் சபை விதித்தது

போர்ட் எலிசபெத்,நவ.22

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைகளை மீறியதற்காக டெண்டுல்கர் உட்பட இந்திய கிரிக்கெட் வீரர்கள் 6 பேருக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற தென்னாபிரிக்க மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகளிடையேயான இரண்டாவது 'டெஸ்ட்' போட்டியில் பந்தை வேண்டுமென்றே தேவைக்கதிகமாகச் சேதப்படுத்தல், எதிரணி வீரர்கள் ஆட்டமிழந்ததாக அறிவிக்குமாறு நடுவரிடம் அர்த்தமின்றி 'அப்பீல்' செய்தல் உட்பட சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒழுங்கு விதிகளை மீறிய செயல்களைப் புரிந்ததற்காக இவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

டெண்டுல்கர் ஒரு 'டெஸ்ட்' போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ஆண்டின் இறுதிவரை இந்தத் தடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது; 'டெஸ்ட்' போட்டியில் தான் பெறும் சம்பளத்தின் 75 சதவீதத்தை, அபராதமாகச் செலுத்தவும் டெண்டுல்கருக்கு உத்தரவிடப்பட்டது.

இந்திய அணித்தலைவர் சௌரவ கங்குலிக்கு ஒரு 'டெஸ்ட்' போட்டி மற்றும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஹர்பஜன்சிங், எஸ்.எஸ்.தாஸ், தீப்தாஸ் குப்தா ஆகியோருக்கு ஒரு 'டெஸ்ட்' போட்டியில் விளையாடத் தடையும், சம்பளத்தில் 75 சதவீத அபராதமும் விதிக்கப்பட்டது.

வீரேந்த ஷேவாவுக்கு ஒரு 'டெஸ்ட்' போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## ஆப்கான் அரசில் பெண்களுக்கும் இடமுண்டாம்!

புதுடில்லி,நவ.22

ஆப்கானிஸ்தானின் மொத்த சனத்தொகையில் 60 சதவீதம் பெண்களாக உள்ள நிலையில் வருங்கால அரசில் பெண்களும் முழுமையாகப் பங்கேற்க அனைத்து முயற்சிகளையும் ஐ.நா. மேற்கொள்ளும் என்று மனித உரிமைகளுக்கான ஐ.நா.ஸ்தானிகர் திருமதி மேரி ரொபின்சன் கூறியுள்ளார்.

'இந்திரா காந்தி' சமாதான விருதை பெற்றுக்கொள்ள புதுடில்லி வந்துள்ள அவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.




தி.மகேஸ்வரன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
முதன்மை வேட்பாளர்.

பொதுத் தேர்தல் 2001 யாழ்.மாவட்டம்
ஐக்கிய தேசியக் கட்சி
எம்மினக் கலைஞர்களும், கல்வியியலாளர்களும்,
பல்துறையினரும், கிறிஸ்தவரும், இந்துக்களும் அனைவரும்
அன்றாடப் பிரச்சினைகளும் அகதி வாழ்வும் நீங்கி,
சாந்தியும், சமாதானமும், சமத்துவமும் பெறவைப்பதே
எம் தலையாய கடன்.

(93937)



எல்.திலகநாயகம் போல்
யாழ்.மாவட்டம் இல. 9

## கல்வியியற் கல்லூரிகளுக்கான

# நேர்முகப் பரீட்சைகள் முதலாம் திகதியே நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 22
தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி முதலே யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி செ. அழகரெத்தினம் அறிவித்துள்ளார்.

மேற்படி நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் விமானச் சீட்டுக்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து நேர்முகப் பரீட்சைக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

புதிய ஒழுங்கின்படி 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதி திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் எதிர்வரும் முதலாம் திகதியும்—

29 ஆம், 30 ஆம் திகதிகளில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் 2 ஆம் திகதியும்—கோப்பாயில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சமூகமளிக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மாதுளம் முத்து மூக்கில் சிக்கி 2 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

## குருநகரில் பரிதாபம்

மாதுளம்பழ மூத்து மூக்கினுள் சென்று சிக்கியதால் இரண்டு வயதுச் சிறுவன் மூச்சுத்திணறி மரணமானான்.

யாழ். குருநகரைச் சேர்ந்த சகாயராஜா தனுசன் என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை மாதுளம் பழத்தை உடைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் விளையாட்டாக மூக்குத் துவாரத்தினுள் மாதுளம்பழ முத்தொன்றை சிறுவன் உட்செலுத்தியதாகவும்—

அது உள்ளே சென்று மூச்சுக்குழல் பகுதியில் அடைத்ததால் மூச்சுத்திணறி சிறுவன் மரணமானதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

மூச்சுத்திணறலால் அவதிப்பட்ட சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் வழியில் உயிரிழந்தான் மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-6-15-139)

# நோயாளர் கப்பல் சேவை டிசெம்பரில் 3 முறை மட்டும்

யாழ்ப்பாணம், நவ. 22
செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் வாரம் ஒரு தடவை நடத்தப்பட்டு வரும் நோயாளர் கப்பல் சேவை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 தடவைகள் மட்டுமே இடம் பெறவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் 6ஆம், 13ஆம், 20 ஆம் திகதிகளில் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நோயாளர் கப்பல் சேவை இடம்பெறும் என்றும்—

27 ஆம் திகதி நடைபெற வேண்டிய கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் — அவர் கூறினார்.

மீண்டும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் வழமைபோல் வாரம்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நோயாளர் கப்பல் சேவை இடம்பெறும் என்றும்- அவர் தெரிவித்தார். (ஒ-6)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14-02-1949 மறைவு: 25-10-1990

## அமரர் குழந்தைவேலு தங்கராசா

(காரைநகர், முன்னாள் உரிமையாளர்,
ஸ்ரீராஜன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

திதி: 22 - 11 - 2001

கண்ணீர்க் கடலில் மூழ்கவிட்டு
கண்ணெதிரே தோன்றாமல்
கண் மறைந்து விட்டீர்களே!
உனையிழந்த பதினோராண்டும்
உயிரிழந்த உடல்போல் உருகுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக போசுட்டி முருகனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

216, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(94758)

## சாயிபாபா அவதார தினம்

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை சாயிபாபாவின் 76ஆவது அவதாரதின விழா காலை 8 மணி முதல் நடைபெறும்.

முற்பகல் 10. 15 மணிக்கு அகலத் திரையில் வீடியோ படக்காட்சி இடம்பெறும்.

இலங்கை சத்யசாயி சேவா நிறுவனங்களின் ஆலோசகர் செ. சிவஞானம் சிறப்புரை ஆற்றுவார்.

'மனிதருள் உள்ளுறையும் தெய்வீகம்' என்ற நூல் வெளியிடப்படும். நூலின் மதிப்பீட்டுரையை வைத்திய கலாநிதி ஆர். கணேசமூர்த்தி வழங்குவார். (ஐ)

★ ★ ★

பருத்தித்துறை சாயிமந்திர் நடத்தும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 76 ஆவது ஜயந்திதின விழா நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணி முதல் நடைபெற உள்ளது.

சுப்பிரபாதம், நகர சங்கீர்த்தனம், சமயச் சொற்பொழிவு என்பன விசேடமாக நடைபெறும். பகவானின் 75 ஆவது அவதார நிகழ்வைக் குறிக்கும் வீடியோப் படக்காட்சியும் இடம்பெறும். (ம-7)

## ஜெய்ப்பூர் நிறுவன கண்காட்சி இன்றும் நீடிப்பு

'ஜெய்ப்பூர்' செயற்கைக் கால் நிறுவனத்தினால் கடந்த இரண்டு நாள்களாக நடத்தப்பட்டு வருகின்ற கண்காட்சி இன்று வியாழக்கிழமையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் கண்காட்சியை ஆர்வலர்கள் பார்வையிடலாம். (ம-10)

## குடாநாட்டில் நேற்று சூரன்போர்

குடாநாட்டில் உள்ள பல இந்து ஆலயங்களில் நேற்று சூரன்போர் உற்சவம் கொட்டும் மழைக்கு மத்தியில் நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்று மாலை நடைபெற்ற உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்துகொண்டனர். மழை பெய்து கொண்டிருக்க சுவாமி வீதிவலம் வந்து சூரனைச் சங்காரம் செய்த காட்சியைக் காண குடைகளைத் தாங்கியவாறு பெரும் திரளான அடியார்கள் ஆலயப் பகுதியில் திரண்டிருந்தனர்.

## இதுவரை கிடைக்கப் பெறாதோர்

# வாக்காளர் அட்டைகளை பிரதம தபாலகத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ். பிரதம தபால் அலுவலக சேவைக்குட்பட்ட பகுதிகளில், இடம்பெயர்வு மற்றும் முகவரி மாற்றம் போன்ற காரணங்களால் தபால் மூலம் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். பிரதம தபாலகத்தில் தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டு தெரிவித்தார்.

யாழ். பிரதம தபாலக சேவை எல்லைக்குட்பட்ட வாக்காளர்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்படுமென்றும்—

அவ்வாறு வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் தேர்தல் திகதியான டிசெம்பர் 5 ஆம் திகதி வரை பிரதம தபாலகத்தில் அலுவலக நேரத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காத பலர் தற்போதே தபாலகத்துக்கு வந்து வாக்காளர் அட்டைகளைக் கோருவதாகவும்—

எதிர்வரும் 28 ஆம் திகதி வரை பிரதம தபாலகத்தில் வைத்து வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட மாட்டாதென்பதால், வாக்காளர்கள் வீண்சிரமங்களைத் தவிர்க்குமாறும்—

தபாலதிபர் கேட்டுக் கொண்டார். (ஒ-6)

## இதுவரை வாக்களிக்காதோர்

# டிசெம்பர் 5 ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. [illegible]
தபால் மூல வாக்களிப்பு தினமான நேற்று முன்தினம் வாக்களிக்கத் தவறிய தபால் மூல வாக்காளர்கள் தேர்தல் தினமான டிசெம்பர் 5 ஆம் திகதி வரையும் வாக்களிக்கலாம் என்று யாழ். மாவட்டத் தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் 20 ஆம் திகதியே தபால் மூல வாக்களிப்புத் தினமாக இருந்த போதிலும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் வாக்களிக்கத் தவறியவர்களின் நன்மை கருதி இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தேர்தல் தினத்தன்று மாலை 4 மணிக்கு யாழ். செயலக தேர்தல் அலுவலகத்துக்குக் கிடைக்கக்கூடியவாறு வாக்காளர் அட்டைகளை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் 5ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு தேர்தல் வாக்களிப்பு பூர்த்தியடையவுள்ளதால் அதற்குப் பின்பு கிடைக்கப்பெறுகின்ற வாக்குச்சீட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தபால்மூல வாக்களிப்பு மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்று, அந்த வாக்குச்சீட்டுகள் தேர்தல் அலுவலகத்துக்கு வந்து கொண்டிருப்பதாகவும் தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)

## முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்தக் கருத்தரங்கில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகம் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் விரிவுரையாற்றவுள்ளனர். பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-6)

★ ★ ★

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, பலாலி ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் நிலைய பொறுப்பாளர்களுக்கான கல்வியியற் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 4 நாள்கள் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கல்வி முகாமைத்துவம் மற்றும் கல்வி வழிகாட்டலும் ஆலோசனைகளும் ஆகிய கருப்பொருள்களில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதேவேளை —

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஒன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தினமும் மாலை 5 மணி முதல் பல்கலைக்கழக மாணவர் கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. (-7)

## திவ்வியனின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி ஆண்டு மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் வழக்கு நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் பொலீஸ் தரப்பில் ஆஜராக வேண்டிய முக்கிய சாட்சிகள் சமுகமளிக்காத காரணத்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு விசாரணைகளை ஒத்திவைத்த நீதிபதி, அதுவரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபரான திவ்வியனின் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆஜராகியிருந்தார். (ம-6)

உதயன்

## ஜனாதிபதியின் ஆவேசம்!

"கொலை செய்தவர்களைத் திருப்பிக் கொல்லும் உரிமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு உண்டு. எனவே தேர்தல் வன்முறைகளின்போது உங்களைக் கொலை செய்ய முற்படுபவர்களைக் கொலை செய்வதற்கு ஒருபோதும் தயங்காதீர்கள்!"

- இவ்வாறு வன்முறைக்குத் தூபம் போட்டிருப்பவர் வேறு யாருமல்லர் - இந்த நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய பொறுப்புள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவேதான்.

திஸ்ஸமஹறகமவில் சில தினங்களுக்கு முன்னர் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படி ஆவேசம் கிளப்பியிருக்கின்றார்.

நாகரீக உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் இந்தப் பேச்சுக் குறித்து நாட்டின் மூத்த பிரஜைகளும், புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் அதிர்ந்து போயிருக்கின்றார்கள்.

வழக்கமாகத் தமிழர்களுக்கு எதிராக யுத்தம் என்ற பெயரில் - இனவாத நோக்கோடு - கக்கப்படுகின்ற வன்முறை வெறிமிக்க அறிவிப்புகளுக்கு பின்னணியாக - மூலகாரணமாக - இருக்கின்ற பௌத்த மதப் பீடம் கூட, இப்போது சொந்த இன சகோதரர்களுக்கு எதிராக வன்முறை வெறியைத் தூண்டும் ஜனாதிபதியின் உரையைக் கேட்டு கிறுகிறுத்துப் போயிருக்கின்றன.

"நாங்கள் - மகா சங்கத்தினர் - ஜனாதிபதியின் உரைகேட்டு அதிர்ந்து போயிருக்கின்றோம்" - என்று தேசிய மகா சங்க சபையின் தலைவர் வண.உரப்பொல பிரேமசிறி தேரர் குறிப்பிட்டிருக்கின்றார்.

"எங்களுடைய நாகரிகத்தையும் சரித்திரத்தையும் ஜனாதிபதி மறந்து போய்விட்டது துரதிஷ்டவசமானது" - என்று ஆயர் வண.பிதா ஒஸ்வோல்ட் கோமிஸ் தெரிவித்திருக்கின்றார். தனது உரையில் வன்முறையைத் தூண்டும் விதத்தில் குறிப்பிட்ட விடயங்களை வாபஸ்பெற வேண்டும் எனத் தாங்கள் ஜனாதிபதியைக் கோரியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எல்லா மதத் தலைவர்களும் சேர்ந்து இத்தகைய கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும். அதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவது நல்ல சகுனமே.

"ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்ட இந்த விடயங்களை வாபஸ் பெறத் தவறினால் ஜனநாயகத்தின் பெயரால் வீதிக்கு இறங்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்" - என்று பிரபல பௌத்த தத்துவ அறிஞர் பேராசிரியர் எஸ்.பி. ஹெட்டியாராச்சி குறிப்பிட்டிருக்கின்றார்.

இதற்கிடையில் தேசிய பௌத்த சங்க சபா அவசரமாகக் கூடி ஜனாதிபதிக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றது. அதுவும் கவனிக்கத்தக்கது.

"மகா சங்கத்தினால் ஏற்கனவே கௌரவம் பட்டமளித்து ஆசீர்வதிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இப்படிக் கூறியிருப்பது வேதனைக்குரியது.

"கொலை செய்வதற்கு ஒருவரைத் தூண்டுவது பௌத்த கோட்பாடுகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மத வழிகாட்டல்களுக்கும் எதிரானதாகும். இத்தகைய போக்கை எந்த மதமும் எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது. இந்த நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அதியுயர் கடமை ஜனாதிபதிக்கு உண்டு. அவரே நாட்டின் தலைவர். சட்டத்தையும் ஒழுங்கையும் வேறு யாரேனும் கையிலெடுப்பதை அவர் அனுமதிக்கக் கூடாது; தூண்டவும் கூடாது. சரியான விசாரணைகளின் பின் தவறிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கு திட்டவட்டமான சட்ட ஏற்பாடுகள் நாட்டில் உள்ளன.

"இந்த நடைமுறையில் இருந்து விலகி, பழி தீர்க்கும் விதத்தில் கொலை செய்யுமாறு நாட்டின் தலைவியே தூண்டுவதாயின், அது நிச்சயமாக நாடு பயங்கரவாத நாடாக - சட்டம் ஒழுங்கு இல்லாத காட்டுமிராண்டிகளின் நாடாக - மாறிக்கொண்டிருக்கின்றது என்றே அர்த்தம். இது பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பேராபத்து, பாதிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையாகும். எனவே ஜனாதிபதி உடனடியாக தனது கூற்றை வாபஸ் பெற்று, அதைப் பகிரங்கமாக அறிவித்து, அதற்கு உரிய விளம்பரம் கொடுக்கவேண்டும்"

- இப்படி தேசிய மகா சங்க சபா கோரியிருக்கின்றது.

இது விடயத்தில் பௌத்த மத பீடங்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்திருக்கின்றன என்றே கூறவேண்டும்.

அஹிம்சையும், காருண்யமும் பேசும் நமது இந்து மதத் தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? இந்து சமூகம் அவர்களது பிரதிபலிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

# 'இலக்கிய அமுதம்' நூல் வெளியீடு

வலி.வடக்கு,நவ.22

மட்டுவிலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் நா.நல்லதம்பியின் 'இலக்கிய அமுதம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் வாழ்த்துரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இ.கைலைநாதனும் வெளியீட்டுரையை ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரமும் நூல் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் பண்டிதர் செ.திருநாவுக்கரசுவும் வழங்கவுள்ளனர். (ஐ-86)

## நாட்டு நடப்பு

களவு - VII

பட்டப் படிப்பும் பண்பான நேர் நடையும்
மட்டற்ற ஞானமும் மதிப்பல்ல - இட்டமுடன்
கொள்ளை அடித்து குவிக்கும் பெருநிதியால்
கள்வர்க்கே உண்டு மதிப்பு.

*- விகடகவி.*

# புலிகள் அமைப்பைத் தடைசெய்த முடிவை கனடா அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.22

மக்களை அழிக்கும் அரச பயங்கரவாதம் குறித்து எதுவும் பேசாமல் மக்களை அழிவில் இருந்து மீட்க முயலும் விடுதலை இயக்கத்தைத் தடை செய்திருக்கும் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்ற நியாயத்தின் பேரால் வேண்டுகிறோம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இலங்கைக்கான கனடா தூதருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

கடந்த வாரம் தங்களது அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை கனடாவில் தடை செய்துள்ளதாக வந்த அறிவிப்பு தமிழ் பேசும் மக்கள் மனதில் பேரிடியாக அமைந்துள்ளது. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது முதல் மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை முற்றாக அழித்தொழிக்கும் பணியிலேயே மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். தனிச் சிங்களச் சட்டம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் போன்றவற்றால தமிழ் மக்களின் உரிமைகளும் நிலங்களும் பறிக்கப்பட்டன. இவற்றுக்கெதிராக அப்போது சாத்வீக வழியில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதெல்லாம் சிங்கள அரசு பொய் வாக்குறுதிகளை வழங்கியும் போராட்டங்களைக் குழப்பியும் தமிழ் மக்களை ஏமாற்றி, எம் இனம் விழிப்புடன் செயல்படவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது. அகிம்சை வழியில் நாம் முன்னெடுத்த போராட்டங்கள் அடக்கப்பட்டதாலும் அதனால் ஏற்பட்ட மக்கள எழுச்சியும், தமிழ் மக்களின் உரிமைகளையும் உடைமைகளையும் பாதுகாக்க, மீட்பெற, ஆயுத ரீதியாகவே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்கு அப்போதைய இளைஞர்கள் தள்ளப்பட்டார்கள். இதன் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம்.

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளதன் மூலம் நாளாந்தம் எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அரசு அப்பாவி மக்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்திக்கொண்டு வருகிறது.

### உரிமை மீறல்

மறுபுறம் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் அப்பாவித் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் காரணமின்றிக் கைது செய்யப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுகுட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுதல், சிறைகளில் விசாரணையின்றி அடைக்கப்படுதல் என்பன தொடர்ந்தவண்ணமே உள்ளன. இன்று யாழ்.குடாநாடு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாகவே உள்ளது. இங்கு வாழும் இலட்சக்கணக்கான மக்களும் வெளியிடங்களுக்கான போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். யாழ்.குடாநாடு அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட, கடந்த 5 வருட காலப் பகுதியில் குடாநாட்டு மக்களின் நடமாடும் சுதந்திரம் பறித்தெடுக்கப்பட்டுள்ளது. பல அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் விலைகளும் உயர்வாகவே உள்ளன. யாழ்.போதனா வைத்தியசாலையிலும் கூட மருந்துப்பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலுள்ள இராணுவத்தினரதும் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக்கட்சியினரின் அட்டகாசங்கள் காரணமாக மக்கள் பயத்தில் உறைந்துபோயுள்ளனர்.

இதேவேளை -

இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத வன்னி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்கள் மீது அரசு கடந்த பத்து வருடங்களாக மிக இறுக்கமான பொருளாதாரத் தடைகளை விதித்து மக்களைப் பட்டினி போட்டு கொலை செய்கிறது. குழந்தைகள் போசாக்கு அற்றவர்களாக பாதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பெருமளவு நோயாளர்கள் நாளாந்தம் இறந்துகொண்டிருக்கின்றனர். இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில உள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் வறுமையில் வாடினாலும் மரண பயமின்றி நிம்மதியாக வாழமுடிகிறது. அங்கே எமது கலாசாரம் பேணப்படுகின்றது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் புலிகளால் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதனை அண்மையில் வெளியான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இவ்வாறு அரசினால் மேற்கொள்ளப்படும் அழிவு நடவடிக்கைகளை நிறுத்தி, தொடரும் போருக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்ற அக்கறையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலப்பகுதியில் ஐந்து மாத காலம் யுத்த நிறுத்தம் செய்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்திலும் கூட ஸ்ரீலங்கா அரசு தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், தமிழர்களை அழித்தொழிப்பதிலும் ஆர்வம் காட்டியதே தவிர நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை.

### பொங்கு தமிழ்

அதுமட்டுமன்றி இவ்வருடம் ஜனவரி மாதம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆகிய நாமும் யாழ்.குடாநாட்டில் உள்ள தமிழ் மக்களும் இணைந்து எமது ஆத்ம அபிலாசைகளை வெளிப்படுத்த 'பொங்கு தமிழ்' என்ற நிகழ்வினை நடத்த முயன்றோம். அந்நிகழ்வின் மூலம் அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன், தமிழ் மக்களின் அபிலாசைகளான -

தனித்தேசிய இனம் -
மரபுவழித் தாயகம் -
சுயநிர்ணய உரிமை -

- என்பன அங்கீகரிக்கப்படக்கூடிய வகையில் பேச்சுகளை அரசு ஆரம்பிக்க வேண்டும் எனக்கூறி பெரும் எழுச்சி நிகழ்வு ஒன்றினை எவ்வித வன்முறைகளும் இன்றி நடத்த முற்பட்ட போது அம்முயற்சி சந்திரிகா அரசினாலும் அதன் ஆதரவு பெற்ற தமிழ் ஆயுதக்குழுக்களினாலும் மிக மோசமான முறையில் அடக்கி குழப்பியடிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்க் கூலிப் படைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு தமிழர்கள் வாழும் அவர்களது சின்னஞ்சிறிய தாயகப் பிரதேசத்தை சூழ்ந்து நின்றுகொண்டு பொருளாதாரத் தடைகளையும் விதித்து மனித உரிமை மீறல்களையும் செய்துகொண்டு தமிழர்களின் ஜனநாயகக் குரல்களையும் நசுக்கியபடி உலகில் இருந்து பெற்றுக் கொண்ட நவீன ஆயுதங்களாலும் விமானங்களாலும் தமிழர்கள் மீது ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடத்திக் கொண்டு இருக்கின்றது. இதனை எதிர்த்து இக்கொடுமைகளில் இருந்தும், அரச பயங்கரவாதத்தில் இருந்தும் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக - அதனை எதிர்த்து - தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள். அதன் மூலம் இலங்கையில் நடைபெறுவது ஓர் இனப்பிரச்சினை என்ற உண்மையை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தியும் உள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க மக்களை அழிக்கும் அரச பயங்கரவாதத்தைப் பற்றி எதுவும் பேசாது மக்களை அழிவில் இருந்து மீட்க முயலும் விடுதலைப் போராட்டத்தை தடைசெய்துள்ள உங்களது செயலை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நீங்கள் புலிகளைத் தடை செய்தமையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு, ஸ்ரீலங்கா அரசினால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நன்மை கருதி தாங்கள் இம் முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என நியாயத்தின் பெயரால் வேண்டிக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## நாளை

கார்த்திகை 8
வெள்ளிக்கிழமை
திதி : அட்டமி
மாலை 6.27 வரை.
நட்சத்திரம் : சதயம்
முழுவதும்
கோஷ்டாஷ்டமி நாள்
சுபநேரம் : 6.11 - 7.41
ராகுகாலம் : 10.41 - 12.11
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உள்ளம் தூய்மையாக இருந்தால்தான் பேச்சுத் தெளிவாக இருக்கும். பேச்சுத் தெளிவாக இருந்தால்தான் நீர் நேர்மையானவனாக இருப்பீர்



கட்டாயக் கல்வி பிரசார தினத்தை முன்னிட்டு பிராந்தியம் 9,10 ஆகியவற்றைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்கள் 'யூனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய ஓவியப் போட்டியின் கண்காட்சியும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. பிரதமஅதிதியாகக் கலந்துகொண்ட 'யூனிசெவ்' நிறுவன யாழ்.அலுவலக திட்ட முகாமையாளர் செல்வி ஏலோ நோறா நாடாவை வெட்டி கண்காட்சியை திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின்

# பிறந்த நாள் வைபவத்தை ஒட்டி மல்லாவி ஆஸ்பத்திரிக்கு மருந்து

வலி-வடக்கு,நவ.22

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தினத்தை ஒட்டி மல்லாவி அரசினர் வைத்திய சாலைக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளை அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக மருந்து வகைகளை அங்கு அனுப்ப ஏற்பாடு செய்வது என்று தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதியத்தின் நிர்வாகக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சட்டத்தரணி மு.சபாநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்கள் 150 பேருக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல்.


கண்சிகிச்சை பெற வரும் வறிய மாணவர்களுக்கு வைத்திய உதவி அளிக்க மானிப்பாய் லயன்ஸ் கழகத்துக்கு ஒரு தொகை நிதி உதவி வழங்குதல்.

சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தை ஜனவரி மாதம் 7ஆம் திகதி திறப்பதுடன் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடல். (ஐ-86)

# பொதுத் தேர்தல் - 2001

# ஆயுத அட்டகாசத்தை அடியோடு ஒழிப்போம்!

*சபாநாயகர் அவர்களே!*



“இந்த நாட்டில் ஆயுதம் வைத்திருக்கத் தகுதியற்றவர்களுக்கு - ஆயுதம் வைத்திருக்கக் கூடாதவர்களுக்கு - வழங்கப்பட்ட ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

“ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களைக் கொண்டு திரிவதால் எல்லா வன்முறைச் சம்பவங்களையும் அவர்கள்தான் செய்கின்றார்கள் என்று நான் அடித்துக் கூறவரவில்லை.

“ஆனால் இந்த ஆயுததாரிகளின் நடமாட்டம் காரணமாக மக்கள் மத்தியில் பீதி நிலவுகின்றது.

“யார் இத்தகைய வன்முறைச் சம்பவங்களைச் செய்கின்றார்களோ, அவர்களைத் தெரிந்தவர்கள் கூட - இந்த ஆயுததாரிகளுக்கு அஞ்சி - அவற்றை வெளிப்படுத்தாமல் ஒதுங்கி விடுகின்றார்கள்.

“உண்மைகள் வெளிவர வேண்டுமாயின் - அம்பலப்படுத்தப்பட வேண்டுமாயின் - முப்படைகள் மற்றும் பொலீஸார் தவிர்ந்த ஏனைய குழுக்களிடமிருக்கும் ஆயுதங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

“யாருக்கும் பாதுகாப்புத் தேவை எனில் சட்டரீதியான படை அல்லது பொலீஸாரின் காவலை அவர்களுக்கு வழங்கலாம் - அவர்களே ஆள்களை வைத்து, ஆயுதக் குழுக்களை நடத்த விடாமல்.

“யாழ்ப்பாணத்தில் எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்கே ஒரு மூலையிலே முகாம். அந்த முகாமின் வாசலிலே ஆயுதம் தாங்கிய சிலர். மக்கள் எவ்வாறு நிம்மதியாக நடமாட முடியும்? மக்கள் எவ்வாறு சுதந்திரமாகச் சிந்திக்க முடியும்? மக்கள் எவ்வாறு நிம்மதியாக வாக்களிக்க முடியும்?

‘ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிப்பது” என்றவொரு பழமொழி உண்டு. அதுபோல, இத்தகைய ஆயுததாரிகளுக்கு இடமளிப்பவர்களின் கழுத்திலும் கூட ஒரு நாளைக்கு கை வைக்கப்படும். அப்போதுதான் அரசு விழித்தெழும் என நான் நினைக்கிறேன்.

“இந்த நாடாளுமன்றத்துக்கு நியமன உறுப்பினர்களாக வந்த சிலர் இங்கு வீரம் பேசுகின்றார்கள். அவர்கள் சிவபெருமான் தலையில் இருக்கின்ற பாம்பு போன்றவர்கள்.

“நாங்கள் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துத்தான் வந்திருக்கின்றோம். தொடர்ந்தும் அதனை எதிர்ப்போம். அதையே எமது மக்களிடம் கூறி வாக்குக் கேட்டு இந்த நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி வந்திருக்கின்றோம்.

“ஆனால் துப்பாக்கிகளைக் காட்டி மக்களை மிரட்டி வாக்குப் பெற்றும் பல பிழையான வழிகளிலே வாக்குகளைப் பெற்றும் இந்த நாடாளுமன்றத்துக்கு வந்தவர்கள் எம்மை குறை கூற முற்படுவது விசித்திரமானது.

“51 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தீவகத்துக்கு வேறு கட்சிக்காரர் எவரையும் காலெடுத்து வைக்க அனுமதிக்காது, வாக்குகளைச் சுருட்டி, யாரோ ஒருவரின் வெற்றியில் குதிரையேறி இங்கு வந்தவர்கள், பெரிய தியாகங்களைப் புரிந்த பெரிய மனிதர்கள் போல வெட்கமின்றி நாடாளுமன்றில் கருத்துக் கூறுகின்றார்கள். அப்படி ஏதும் கூறுவதற்கு தகுதியற்றவர்கள் அவர்கள்.”

*- கடந்த நாடாளுமன்றம் கூடிய கையோடு 2000, ஒக்ரோபர் 18ஆம் திகதி ஆனந்தசங்கரி ஆற்றிய உரை.*

## ஆயுத அட்டகாசத்தை அடியோடு ஒழிக்க...!

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

## வீ.ஆனந்தசங்கரியை

ஆதரிப்போம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி ☓

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ~~3~~ ☓ | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

(C/19357)

உள்ளம் கனிந்த நன்றியுணர்வோடு

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை அராலி மேற்கு கோட்டைக்காடு நொச்சியம்பதி அருள்மிகு விநாயகர் ஆலயம்

பழம் பெரும் பிரசித்தி பெற்ற எமது ஆலய புனரமைப்புப் பணிகளுக்காக மூன்று லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து அதில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை உடன் வழங்கி உதவியமைக்காக,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரத்துறை இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்

கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமாகிய

**உயர்திரு.கே.வி.குகேந்திரன** *(ஜெகன்)*

அவர்களையும்



இந்து கலாசார அமைச்சின் வடபிராந்தியப் பொறுப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும் அதன் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், வலி.மேற்கு, இந்து ஆலயங்களின் மகா சபையின் ஜோஷகருமாகிய

**உயர்திரு.ந.திரிலோகநாதன** *(J.P.U.M.)*

அவர்களையும்

எல்லாம் வல்ல விநாயகர் அருள்பெற்று சிறப்புற வாழ்ந்து மேன் மேலும் மக்கள் சேவை புரிந்திட வேண்டும் என நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்.

*அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.* (94661)



# நீங்காத நினைவில் ஓராண்டு

தோற்றம் 11 - 06 - 1934



மறைவு 02 - 12 - 2000

## அமரர் செல்லர் குமார்

திதி: 22-11-2001

காலங்கள் நகர்ந்து இன்று
ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகளை நாம் மறப்பதில்லை!
கண்ணை இமை காப்பதுபோல்
எமைக் காத்து
அன்புகாட்டி ஆதரித்தீர்!
உங்கள் அன்பு நெஞ்சம் மறப்போமா?

(94708)


*ஆதியாமலை, உடுப்பிட்டி.*

*உங்கள் பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.



# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 12 - 1929



உதிர்வு 22 - 11 - 1998

## அமரர் கந்தையா அமிர்தலிங்கம்

*(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)*

ஆண்டு மூன்று ஆனதைய்யா
அன்பு முகம் பார்த்து
ஆண்டு ஆயிரமானாலும்
அகன்றிடுமோ உம் நினைவுகள்?

(94631)

*3/1 புதுறோட், கோப்பாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்; குடும்பத்தினர்.


# யுத்தம் முடிவுக்கு வந்ததும் ஐ.நா. சமாதானப் படைகளில் இராணுவத்தினருக்கு வேலை

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு,நவ.22

இலஙகை இராணுவத்தினருக்கு ஐ.நா.சமாதானப் படையில் தொழில் வாய்ப்புத் தேடிக் கொடுக்க இலங்கை முயன்று வருகிறது. விடுதலைப் புலிகளுடனான மோதல் முடிவுற்று இராணுவப் படைகள் கலைக்கப்பட்டதும் இந்தத் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது. ஆயுதப் படையின் தபால் மூலம் தமது வாக்குகளைச் செலுத்தவிருந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிகா படையினருக்கான மடல் ஒன்றை வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுடனான நீண்ட கால மோதலுக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும் உங்கள் தொழில்களை நீங்கள் இழக்க மாட்டீர்கள். ஒரு சில சர்வதேச விமான நிலையங்களை, சில பெரிய துறைமுகங்களை, பெருந் தெருக்களை நிர்மாணிகக நாம் திட்டமிடுகின்றோம். இவை எல்லாவற்றுக்கும் உங்களது சேவை எமக்குத் தேவை. யுத்தம் முடிவடைந்ததும் நாம் உங்களை வெறுங்கையுடன வீட்டுக்கு அனுப்பமாட்டோம். நீங்கள் உங்கள் தொழிலகளை இழக்க மாட்டீர்கள்.

ஐ.நா.அமைதி காக்கும் படைகளில் உங்களுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்க நாம் ஏற்கனவே ஐ.நா.வுடன் ஒழுங்குகளைச் செய்து வருகின்றோம்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா தனது மடலில் தெரிவித்துள்ளார். "இலங்கை மாதாவின் வீரமிகு புத்திரர்களுக்கு" என்ற தலைப்பிலான இந்த மடல் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினருக்கும் பொலீஸாருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ)

# மட்டக்களப்பு நகரப் பகுதியில் மீண்டும் வெள்ளை வான் பீதி!

இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வான் ஒன்று மட்டக்களப்பு நகரிலும், ஆரையம்பதியிலும் ஓடித் திரிவதையிட்டு பொதுமக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது. அந்த வாகனத்தில் ஆயுதம் தரித்த சிலர் இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

இந்த வாகனத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் வேட்பாளரின் படங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

இந்த வாகனம் இரவு வேளையில் ஆரையம்பதி விசேட அதிரடிப்படை முகாமுக்குள்ளேயே நிறுத்தப்படுவதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வானை ஓட்டித் திரிபவர் இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் முன்னாள் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் அதன் பின்பும் இவ்வாறான வெள்ளை வான்களில் வந்தவர்களே பலரைக் கைது செய்து ரயர் போட்டு எரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-21)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் நடத்தும் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை 'தேர்தல் முறைமையும் 12ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலும்' என்னும் கருப்பொருளில் உரையாற்றுவார். (ஐ-ரி)

## வரதர் அணி பிரசாரம்

யாழ்ப்பாணம், நவ.22

பொதுத் தேர்தலில் சுயேட்சை அணியாக யாழ்மாவட்டத்தில் போட்டியிடும் வரதர் அணி வேட்பாளர்கள் நேற்று முன்தினம் யாழ்நகரில் கடை கடையாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடடனர்.

யாழ்.மாநகரசபை உறுப்பினரும் தலைமை வேட்பாளருமான த.சுபத்திரன் தலைமையில் ஏனைய வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் சிவப்பு தொப்பி அணிந்து சென்று ஆதரவு திரட்டினார்கள்.

ஆதரவு திரட்டும் போது தமது வேலைத்திட்டம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர். (ம-173)

## புவியியல் பரீட்சை 24ஆம் திகதி

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.வலய கல்வித் திணைக் களத்தினால் தரம் 11 இற்கு ஏற்கனவே நடத்தப்பட்ட புவியியல் பரீட்சை பயிற்சிப் பரீட்சை ஆகும். தரம் 11இற்கான புவியியல் ஆண்டிறுதிப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனவும், இப் பரீட்சைப் புள்ளியே மூன்றாம் தவணைக்குரிய புள்ளியாக எடுத்துக்கொள்ளப்படுமென யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-ரி)

## 85 பஸ்கள் தேர்தல் கடமையில்!

யாழ்ப்பாணம்,நவ.22

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் பணிக்கு யாழ். மாவட்டத்தில் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 85 பஸ்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் பணிகளில் ஈடுபட 160 பஸ்கள் தேவை. ஆனால் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையிடம் 85 பஸ்களே சேவையில் ஈடுபடத் தக்கநிலையில் உள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

# வாசகர் திருமுகம்

## அமிர்தமானாலும் அளவுக்கு மீறலாகாது!

ஒலிபெருக்கிகள் பற்றிய சர்ச்சையை 'வாசகர் திருமுகம்' பகுதியில் வாசித்தேன். கோயில்களில் நிச்சயமாக ஆலய மணி அடிக்கத்தான் வேண்டும். தேவாரம், திருவாசகம் மற்றும் பக்திப் பாடல்கள் ஒலிக்கத்தான் வேண்டும். எல்லாம் பக்தி பூர்வமாக நடக்கவேண்டும். மனம் இறைவனில் லயிக்கவேண்டும். அப்பொழுதுதான் தெய்வ கடாட்சம் கிடைக்கும்.

ஆனால் அமிர்தத்துக்கும் ஓர் அளவு, கணக்கு உண்டு. மீறினால் அதுவே நஞ்சாகும். அமிர்தமாகிய ஆலயமணி அடிக்கத்தான் வேண்டும் என்பதற்காக அதிகாலை 4.30 மணிக்கு 10 முதல் 15 நிமிடங்கள் தொடர்ந்து கண்டாமணியை அடிப்பதும், இரவு 3.30 மணிக்கு திருவாசகம், திருப்பதிகத்தை பனையளவு உயரத்தில் கட்டப்பட்ட ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்புவதும் ஊரில் உறக்கத்தில் இருக்கும் மக்களை உலுக்கி எழுப்புவதும் அளவுக்கு மீறிய அமிர்தமாகும்.

திருவிழாக்கள் நடக்கத்தான் வேண்டும். அதற்காக நாள் முழுவதும் ஒலிபெருக்கிகளை அலறவிடுவது அளவுக்கு மீறிய செயலாகும்.

எனது ஊர் சுன்னாகத்தில் பிரதான சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அந்தச் சுற்றாடலில் பத்துக்கும் மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் இவ்வாறு அமிர்தம் அளவுக்கு மீறினால் எமக்கு ஊரைவிட்டு ஓட வேண்டும் போல் இராதா?

வீடுகளில் வயோதிபர்கள் மட்டுமல்ல, கைக்குழந்தைகள், சிறுவர்கள், கல்விகற்கும் மாணவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், களைத்துப்போய் வந்துறங்கும் தொழிலாளர்கள் என பலதரப்பட்டவர்கள் இருப்பார்கள். இவர்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் தொல்லை கொடுப்பது நியாயமானதா? என்று சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஊரில் இருக்கும் மக்கள் எல்லோரும் துறவிகள் அல்லர். எந்தநேரமும் திருவாசகம், திருப்பதிகம் கேட்டுக்கொண்டிருக்கவேண்டுமா என்பதையும் சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

குடாநாட்டில் 20 பேருக்கு ஒரு கோயில் இருப்பதாக ஒரு மதிப்பீடு. அப்படியிருக்க தெய்வப்பாடல்கள் ஒலிபெருக்கிகளில் பக்தர்களை தேடிப் போகவேண்டிய தேவையில்லை. பக்தர்கள் தத்தமது வீடுகளுக்கு அருகில் இருக்கும் கோயில்களுக்குச் சென்றே வழிபடுவார்கள்.

**சுன்னாகம்.** **வ.கஜேந்திரன்.**

## கல்வி அதிகாரிகளின் அசமந்தத்தால் மாணவர்கள் பெரும் திண்டாட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்போது மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பரீட்சையானது ஒழுங்காக நடத்தப்படாமையினால் எமது பிள்ளைகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி உள்ளனர்.

குறிப்பாகக் கல்வி வலயத்தால் அனுப்பப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நேரசூசியின்படி பாடங்கள் நடைபெறாமல் உள்ளன. இதனால் மாணவர்கள் குறித்த பாடத்திற்கான முன்ஆயத்தம் இல்லாமலேயே பரீட்சை எழுதவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும் அனைத்துப் பாடங்களுக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள அறிவித்ததற்கிணங்க எமது பிள்ளைகளுக்கான பரீட்சைக் கட்டணத்தை முழுமையாக செலுத்தி இருந்தோம். ஆனாலும் சில பாடங்களுக்கான வினாத்தாள்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் மாணவர்கள் வினாக்களை எழுதிய பின்னரே பரீட்சை எழுதுகின்றனர்.

தற்போது நடைபெறும் மூன்றாம் தவணைப் பரீட்சையானது மிகவும் முக்கியமானது என்பது தெரிந்தும், கல்வி அதிகாரிகள் ஏன் இப்படி நடக்கின்றனர்? ஏற்கனவே பல இன்னல்களை அனுபவித்த எமது பிள்ளைகளின் மனவேதனையை சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் கருத்தில் எடுப்பார்களா?

எனவே மேற்குறித்த தவறுகளை நீக்கி மாணவர்களின் எதிர்கால நலன்கருதி இனி வரும் காலங்களிலாவது இவற்றை சீர்செய்வதற்கு உயர் அதிகாரிகளும் பாடசாலைச் சமூகத்தினரும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்.**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இல.56/5, சம்பியன் லேன், கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா சுந்தரலிங்கம் என்பவரது தேசிய அ.அ. (இல.481924820V), விசேட அ.அ. என்பன நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கும் திருநெல்வேலிச் சந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.73, பிறவுண் வீதி, நீராவியடியில் உள்ள கரன் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும். (94732)

நாவற்குழியைச் சேர்ந்த சின்னன் இலட்சுமிகாந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 502460153V), விசேட அடையாள அட்டை (இல.091037230) என்பன பண்டத்தரிப்புக்கும் சாந்தைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள சில்லாலை வடக்கு தெற்கு, கிராம அலுவலர் பணிமனையில் ஒப்படைக்கவும். (94746)

### மணமகன் தேவை

உயர் குடும்பத்தில், 1972, ரேவதி நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாயுடைய, A/L சித்தியடைந்த, பொது நிறமான, பண்பான மணமகளுக்கு படித்த, கௌரவமான தொழில் மணமகனை அல்லது வெளிநாட்டு ஸ்பொன்ஷருடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். நம்பிக்கையானவர் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1398, மே/பா, உதயன். (94730)

### சாயி அவதாரதின நிகழ்ச்சி

வலி.வடக்கு,நவ.22

ஊரெழு சத்தியசாயி மண்டலியில ஸ்ரீ சத்தியசாயி பாவாவின் அவதார தின நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளன.

பிரதமவிருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் பதில் நீதிவானுமான மு.திருநாவுக்கரசுவும் கலந்துகொள்ளவுள்ளார்.

'குருசங்கர்ப்பம்' என்ற நூலும் வெளியிடப்படவுள்ளது.

(ஐ-86)

---

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## 2002ஆம் ஆண்டுக்கான இலக்கத் தகடுகள் வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

**கீழ்காணும் தகடுகள் தயாரித்து வழங்குவதற்கான கூறுவிலை 2001.11.29 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

1. துவிச்சக்கரவண்டி உரிமத் தகடுகள்.
2. வண்டில் உரிமத் தகடுகள்.
3. நாய் உரிமத் தகடுகள்.

கூறுவிலைக்குரிய படிவத்தை மீளளிக்கப்படாத ரூபா 50/- ஐயும் அதற்கான 12 1/2% ஜீ.எஸ்.ரிஜயும் செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

ந.திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.

(C/19394)

---

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 04 - 1921 | 22 - 11 - 1997 |

### சிரோன்மணி இ.குமாரசுவாமி J.P.

(இளைப்பாறிய ஆசிரியர்)

**திதி: 23-11-2001**

*பாசமுடன் எம்மைப் பள்ளிக்கு அனுப்பிவைத்து*
*பல்கலையும் கற்பித்துப் பார்புகழ வைத்தவரே!*
*நேசமுடன் எம்மோடு நெடுநாளாய் இருக்கையிலே*
*காலன் அவன் பொறுக்காமல் கவர்ந்துவிட்டான் நொடியினிலே.*

(94742)

*'கமலவாசா',*
*ஆனைக்கோட்டை.*

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## நூலகத்துக்கு புதிய மேல்மாடிக் கட்டடம்

வலி.கிழக்கு,நவ.2

நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள கோண்டாவில் கிளைப் பொதுநூலகத்திற்கு 15 லட்ச ரூபா செலவில் புதிய மேல்மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது.

இந்த நூலகத்தின் இடவசதி கருதியே இரண்டாவது புதிய மேல் மாடியை நிறுவ வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 15 லட்ச ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

(க-180)

---

## நன்றியுணர்வுடன் வாழ்த்துகின்றோம்

### கற்குளம் அருள்மிகு கருமாரி அம்மன் ஆலயம்

கொட்டடி, யாழ்ப்பாணம்

மேற்படி ஆலய கட்டடத் திருப்பணி வேலைகளுக்காக நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா ஒரு லட்சம் நிதியை வழங்கி அதில் உடன் ஐம்பதினாயிரத்தைத் தந்துதவிய பெருந்தகைகளான,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.**கே.வீ.குகேந்திரன்**
(ஜெகன்) அவர்களையும்

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்
உயர்திரு.**ரீகன்** தோழர்
அவர்களையும்



தோழர் திரு.**கேதீஸ்வரன**
அவர்களையும்

எமது கருமாரி அம்மன் ஆசீர்வாதத்துடன் அருள்பாலிக்க வேண்டுமென நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆலய நிர்வாகத்தினர்.

*கற்குளம் அருள்மிகு கருமாரி அம்மன் ஆலயம்.*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

(94667)

---

## வாழ்த்துகிறது வட்டு. மத்தி



*யா/மிருசுவில் றோ. க. த. க. பாடசாலை அதிபர்*

### திரு. F.X.அன்ரன் அவர்கள்

இலங்கை அதிபர் சேவையில் தரம் IIக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு; அவர் பணி மேலும் தொடர்ந்து; சேவையில் உயர்ந்து வாழ்க பல்லாண்டு என்று மனமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**வட்டு. மத்திய கல்லூரி,**
**வட்டுக்கோட்டை.**

**- அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.**

(94745)

---

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை குமாரசுவாமி

*(முன்னாள் வர்த்தகர் - குருநாகல்)*

இல.19/1, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை குமாரசுவாமி 20.11.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பொன்னம்பலம், திருப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியவதி (கனடா), மாலதி (தாவடி), கலாவதி (ஆசிரியை யா/கலட்டி மெ.மி.த.கா.பாடசாலை), ராஜ்குமார் (கனடா), சூரியகுமார் (கனடா), காலஞ்சென்ற ரமேஷ்குமார் மற்றும் கணேஷ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வெற்றிவேலுப்பிள்ளை (கனடா), திருக்கேதீஸ்வரன (தாவடி ஈஸ்வரன் கொமினிக்கேசன்), தேவன் (ராஜா ரேடர்ஸ்), சித்திரா (கனடா), பரிமளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*19/1, ஐயனார் கோயில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (94747)

**தகவல்:**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

### யாழ்.மாவட்டம் 05-12-2001

**யாழ். மாவட்ட தமிழ் வாக்காளர்களே!**

உங்கள் தனித்துவம் காத்திட
**நடராசா ராஜசூரியர்**
ஆகிய நான் யாழ்.மாவட்ட
ஐக்கிய தேசியக் கட்சியின்
வேட்பாளராகப்
போட்டியிடுகின்றேன்.




உங்கள் தார்மீக அஸ்திரம்
உங்கள் வாக்கு.
அது புனிதமானது.
தவறாது
வாக்களியுங்கள்.

## ந.ராஜசூரியர்

கட்டடக்கலைஞர்
*(ARCHITECT)*
*பாண்டியந்தாழ்வு நடராஜா*
*அவர்களின் மகனும்,*
*வண்ணார்பண்ணை*
*வேருவலை பொன்னுத்துரை*
*அவர்களின் மருமகனும்.*

(93939)

## ந.ராஜசூரியர்



எனது இல. **5**

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 14 பேருக்குத் தண்டப்பணம்

## ரூ. 80 ஆயிரம் செலுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 22

கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த 14 பேருக்கு எதிராகக் கலால் திணைக்கள அதிகாரிகளால் யாழ். நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளின் போது 80 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறு நீதிவான் குற்றவாளிகளுக்கு உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணைகளின் போது குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு குற்றப்பணம் அறவிடப்பட்டவர்களின் பெயர் விவரமும், தண்டப்பணத் தொகையும் வருமாறு:-

அலோசியஸ் அமலதாஸ் (அடப்பன்வீதி, யாழ்ப்பாணம்), இராசையா சிவபாலன் (முனீஸ்வரன்வீதி, யாழ்ப்பாணம்), ஜோன்தவம் (மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி), ஜோகராசா ஈஸ்வரி (வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்)—

இளையவன் செல்வரத்தினம் (காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை), பாலசுப்பிரமணியம் கணேஸ் (வளாகவீதி, திருநெல்வேலி), நித்தியானந்தராசா புஸ்பலதா (முருகன்வீதி, திருநெல்வேலி), [illegible] இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்) —

சறநணம் புஷ்பம் (அன்னங்கை, உரும்பிராய்மேற்கு), பசுபதி இராசமணி (ஐந்து வேம்படி, தாவடி), மயில்சுப்பிரமணியம் (ஐந்து வேம்படி, தாவடி), அந்தோனிப்பிள்ளை தேவதாஸ் (டேவிற் றோட், யாழ்ப்பாணம்).

ஆகிய 12 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா ஆயிரம் ரூபா வீதம் இருபாலை கானான் சிறுவர் இல்லத்துக்கு செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சின்னராசா கலா (அன்னங்கை உரும்பிராய்) என்பவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமும், தர்மப்பணமாக யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கு 2 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் —

இராசதுரை பூரணலட்சுமி (பாரதிபுரம், திருநெல்வேலி) என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும், யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவுக்கு ஆயிரம் ரூபா தர்மப்பணமாகச் செலுத்துமாறும் நீதிவான் ஆர். ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

(க-6)

## யாழ்.சிறையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள

# சந்தேக நபர்கள் 7 பேருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 22

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்காததால் தொடர்ந்தும் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சிதம்பரன் அருணன், சாந்திராஜ் டிரோஷன், கார்த்திகேசு சுசிந்தன் ஆகிய மூவரையும் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி வரையும்—

செல்வரஞ்சன் அல்லது கனியப்ப , தணிகாசலம் தமிழ்செல்வி ஆகிய இருவரையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி வரையும்—

இலங்கைநாதன் கஜேந்திரன், சங்கிலித்தேவன் சண்முகலிங்கம் ஆகிய இருவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆர். ரி. விக்னராஜா உத்தரவிட்டார். (க-6)



# சாயி சிந்தனை

## மதிப்பைக்கொடுத்து அதைப் பெறு!

இவ்வுலகைப்பற்றிய கவலை உனக்கு எதற்கு? உன்னிடம் இருக்கும் தோஷங்களை முதலில் நீ நிர்மூலம் செய். உன்னிடம் இருக்கும் குறைகளைத்தான் நீ மற்றவர் மீது திணித்து குறையிருப்பதாகக் காண்கிறாய்.

மற்றவர்மேல் குற்றம் காண்பவர்களுக்குத் தன்மேல் இருக்கும் குறைகள் எதுவும் தெரியாது.

நீ எதை உண்கிறாயோ அந்த வாசனையுடன் தான் ஏப்பமும் வெளிப்படுகிறது. உனக்கு வருகிற ஏப்பத்தை வைத்து மற்றவர்கள் அதையே உண்டிருக்கிறார்கள் என்று நீ வாதிடுவது எவ்வளவு முட்டாள்தனம்.

அடுத்தவர் மாம்பழம் உண்டால் அவருக்குத்தான் அந்த ஏப்பம் வருமே தவிர, உனக்கு அந்த ஏப்பம் வராது. நீ எந்தப் பழத்தை உண்கிறாயோ அதற்கான ஏப்பம்தான் உனக்கு வரும்.

அதுபோல் எண்ணங்கள் நல்லவையோ கெட்டவையோ அவை உன்னிடமிருந்தே பிறக்கின்றன. பிறர் எண்ணங்கள் உனக்கு வருவதில்லை எந்த எண்ணமானாலும் அது உன் இதயத்திலிருந்தே பிறக்கின்றது.

அடுத்தவரை விமர்சிப்பது தவறு. ஏனெனில் அனைவரிடமும் இருக்கும் இறைவன் ஒருவரே! பிறரை விமர்சிப்பது மஹாபாவம்.

மற்றவர் என்னும்போது அவர்கள் ஏதோ வேறானவர்கள் அல்லர். அவர்களும் கடவுளன்றி வேறெவரும் இல்லை. ஏனெனில் அனைவரிடமும் இருப்பது ஒரே கடவுள்.

ஆகவே எவரையும் தூஷிக்கக்கூடாது, அனைவருக்கும் மதிப்புக்கொடு. அப்போதுதான் மற்றவர்களும் உனக்கு மதிப்புக் கொடுப்பார்கள். உன்னை மற்றவர்கள் மதிக்க வேண்டுமானால் நீ மற்றவர்களை மதிக்க வேண்டும்.

ஆதாரம்: சனாதன சாரதி 1999—மே

# ஜனாதிபதி நாட்டை விட்டு ஓடினால்

# அடுத்து அதிகாரம் யார் கைக்கு?

## 'ராவய' பத்திரிகை கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 22

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பொ. ஐ. முன்னணி ஆட்சி அமைக்க முடியாமற் போனால் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறி விடுவாரா?

இது தொடர்பாக 'ராவய' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதி தனக்குள்ள அதி உச்ச அதிகாரங்களைப் பயன்படுத்திய பின்னரும் பொ. ஐ. முன்னணிக்குத் தோல்வி ஏற்பட்டால் பிரதமரையோ அல்லது அமைச்சரவைகளோ நியமிக்காது உடனடியாக வெளிநாடு சென்று அங்கிருந்து ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினால் அதை அடுத்து உருவாகக்கூடிய நிலை எவ்வாறு அமையும் என்பது குறித்து ஐ. தே. கட்சிக் கூட்டணித் தலைவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

சாதாரணமாக அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமானால் ஜனாதிபதி பதவிக்குப் பிரதமரோ அல்லது சபாநாயகரோ நியமிக்கப்படுவது வழக்கம். இருப்பினும் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசு அமைக்கப்படும் வரை பிரதமரோ அல்லது சபாநாயகரோ நியமனம் பெறாத நிலையில் ஜனாதிபதி வெற்றிடத்திற்கு நாடாளுமன்றத்தில் அதிக ஆதரவு பெற்ற குழுவின் தலைவரை அழைக்கும் அதிகாரம் பிரதம நீதியரசருக்கு கிடைக்கிறது. அத்தகைய ஒரு நிலைமை உருவானால் ஐ. தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதித் தேர்தலின்றி 4 வருடங்களுக்கு ஜனாதிபதியாக நியமிக்கப்படலாம். அந்நிலையில் ஐ. தே கட்சியார் மீது குற்றப் பிரேரணை கொண்டுவந்ததோ அதே நீதியரசர் முன்பாகவே (சரத் என் சில்வா) ரணில் விக்கிரமசிங்கா சத்தியப்பிரமாணம் மேற்கொள்ள நேரிடும்— என்று 'ராவய' தெரிவித்துள்ளது. (ஐ)

# மாவீரர்நாள் நிகழ்ச்சிகள் வன்னியில் ஏற்பாடுகள்

## மக்கள் ஆர்வத்துடன் பங்களிப்பு

வவுனியா, நவ. 22

விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளை முன்னிட்டு பல நிகழ்ச்சிகள் பெருநிலப் பரப்பிலும் வடக்கின் இதர பகுதிகளிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. வன்னி பெருநிலப் பரப்பில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் இதற்கென புனரமைக்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் இந்தப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

முள்ளியவளை பெரும்பாகத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள், பரிபாலன சபைகள், சங்கங்கள், பொதுநிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவையும் மாவீரர் தின அனுஷ்டிப்பில் பங்கு கொள்ளவிருக்கின்றன.

குமிழமுனை கமத்தொழில் சேவை நிலையத்தில் இருந்து கிராமத்தினை ஊடறுத்துச் செல்லும் வீதி இச்சிரமதானம் மூலம் திருத்தப்பட்டுள்ளது என்று வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(க)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு

தென்மராட்சி, நவ. 22

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு (தரம் 1 தொடக்கம் 5 வரை) 2002 ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இடம்பெயர்வின் பின்னர் தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புகளே நடத்தப்பட்டு வந்தன. ஆரம்பப் பிரிவு வகுப்புகள் இடமின்மை காரணமாக இயங்கவில்லை.

ஆரம்பப் பிரிவு வகுப்புகள் 2002 ஜனவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இக் கல்லூரியில் முன்னர் கல்வி கற்ற மாணவர்களும், புதிய மாணவர்களும் இணைந்து கொள்வதற்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அதிபர் திருமதி சி.சிவநாதன் அறிவித்துள்ளார். (க-117)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். பல்கலைக்கழக முதலாம், இரண்டாம்அணி மீன்பிடியியல் டிப்ளோமா தாரிகள் அனைவரையும் கலந்துரையாடல்களுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு வருகைதருமாறு, மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது

(க)

# ஆசிரியர்கள், ஊழியர் விவரம் கணனிமயம்

வலிகாமம் தெற்கு, நவ. 22

வடக்கு – கிழக்கு மாகாண சபையின்கீழ் கடமைபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றிய முழு விவரங்களும் கணனிமயமாக்கப்படவுள்ளன.

இதன்பொருட்டு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் பூரண விவரங்கள் வினாக்கொத்துப்படிவம் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன.

(க-152)

## ஆனையிறவுப் பகுதிக்கான

# வாக்காளர் அட்டைகள் பளை தபாலகத்துக்கு வந்தன

தென்மராட்சி, நவ. 22

பளை அஞ்சல் அலுவலக எல்லைக்குட்பட்ட ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகப் பிரிவில் உள்ள வாக்காளர்களின் வாக்களிப்பு அட்டைகள் இம்முறை பளை அஞ்சல் அலுவலகத்திற்கு தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உப்பளம், நாவற்கொட்டியான், குறிஞ்சாத்தீவு, உமையாள்புரம் ஆகிய பகுதி வாக்காளர்களின் அட்டைகள் வந்துள்ளன என்றும் —

இப்பகுதி வாக்காளர்கள் கரவெட்டியில் இயங்கும் பளை அஞ்சல் அலுவலகத்தில் தமது அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பளை அஞ்சல் அதிபர் அறிவித்துள்ளார்.

(க-117)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வலிகாமம் தெற்கு, நவ.22

2002 ஆம் ஆண்டு தரம் மூன்றில் கற்பிக்க உள்ள ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுக செயலமர்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் 24, 25, 30 ஆம் திகதிகளிலும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளது. (க-152)

# பச்சிலைப்பள்ளி மக்களுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 22

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி போன்ற பகுதிகளில் வசிப்போருக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் விவகார அமைச்சால் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 3 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகப்பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை. உலர் உணவு பங்கீட்டு அட்டை என்பனவற்றுடன் குடும்பத் தலைவர்கள் சமுகமளிக்குமாறும் அவர் அறிவித்திருக்கிறார்.

வலிகாமப் பகுதியில் வசிப்போர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும், வடமராட்சி, வரணி போன்ற பகுதிகளில் வசிப்போர் புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திலும் இன்று முதல் 24 ஆம் திகதிவரை (3 தினங்களிலும்) காலை 9 மணிக்கு தவறாது சமுகமளித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(க)

# டிறிபேக்கல்லூரி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 22

வேறு பாடசாலைகளில் இணைந்து பணியாற்றிவரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் தற்காலிகமாக இயங்கும் பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(க-6)

# புலிகளை போரினூடாக முறியடிப்பது நாட்டுக்குப் பேரழிவைத்தான் தரும்

## அளவெட்டி கருத்தரங்கில் வேட்பாளர் ஆனந்தகுமார்

யாழ்ப்பாணம்,நவ.22

இலங்கை மாதாவின் வீரமிகு புத்திரர்களுக்கு என்ற தலைப்பில் படையினருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார். இதில் தனி இனவாதத்தை கக்கியுள்ள ஜனாதிபதி, விடுதலைப் புலிகளை போரினூடாக முறியடிப்பதாகவே சூட்சுமமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இது நாட்டுக்கு சௌஜன்னியமானதல்ல. யுத்தத்தினூடாக ஒருபோதும் இன்று எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. யுத்தம் பெரும் அழிவை யும் உயிர்சேதங்களையும், பொருளாதாரச் சீரழிவையும் உருவாக்கும்.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்மாவட்டத்தில் போட்டியிடும் ஞா. ஆனந்தகுமார், அளவெட்டியில் நடந்த மக்கள் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளை ஒருபோதும் யுத்தத்தின் மூலம் ஓரங்கட்டி விடமுடியாது. விடுதலை இயக்கங்களை துப்பாக்கிமுனையில் ஒழித்ததாக வரலாறே இல்லை. இதனை நாம் உலக அரசியல் அரங்கில் இருந்து கற்றுக்கொள்ளவேண்டும். இன்று யாழ்.மக்கள் அனைவரும் சமாதானத்திலேயே வாஞ்சை கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளும் சமாதானத்தையே நாடுகின்றனர். அரசாங்கமோ அவர்கள் மீது யுத்தத்

**தேர்தல் களம் X**

தைத் திணித்துள்ளது. அரசாங்கம் யுத்த சிந்தனையை மீள் பரிசீலனை செய்யவேண்டும். சமாதான சூழலில் நடைபெறும் பேச்சுவார்த்தையே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வழிகோலும். முதலில் இதற்கான இதயசுத்தி அரசாங்கத்திடம் இருக்க வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும்பான்மையான விவசாய, மீனவ மக்கள் தங்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக்கூடத் தீர்க்கமுடியாத நிலையில் உள்ளனர். விவசாயிகளுக்கு அவசியமான பசளை, கிருமிநாசினிகளைக்கூட பெறமுடியாத நிலையில் அவர்கள்உள்ளனர். இதற்கு மேலாக தாங்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களைச் சந்தைப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர். நான் தேர்தலில் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும் யாழ்.விவசாயிகளின் விளை பொருள்களைத் தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதற்கு வழி சமைத்துக்கொடுப்பேன் என உறுதியிட்டுக் கூறுகிறேன். அத்துடன் நான் நாடாளுமன்றம் சென்றால் நிச்சயம் மீன்பிடித் தடையை அகற்றுவேன். இது என்னால் முடியும்.

வடக்கு - கிழக்கு மக்கள் எவரும் யுத்தத்தை விரும்பி நிற்கவில்லை. யுத்தம் அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்வு நிச்சயம் வேண்டும். இவ்வளவு காலமும் மாறி மாறிவந்த அரசுகள் யுத்தத்தை வளர்ததுள்ளன. யுத்தத்திற்குக் காரணமாகவுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறி பாசாங்கு செய்துள்ளனர். எனவே தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், சமாதானத்துக்காகவும் நாடாளுமன்றத்தை நான் மேடையாகப் பாவிப்பேன். முதலில் நாட்டில் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். சமாதான சூழ்நிலையூடாக பேச்சு ஆரம்பிப்பதற்கு எனது நாடாளுமன்ற வாழ்வை அர்ப்பணிப்பேன். பேச்சு ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு, விடுதலைப் புலிகள் அரசியல் தளத்தில் கால்பதிப்பார்களேயானால் நான் எனது நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழக்கத் தயாராக உள்ளேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)


## நன்றிகள் பலகோடி....

பதில் அதிபராக நியமனஞ்செய்து நிரந்தர அதிபர் சேவைக்கு என்னை உயர்விக்க வழிகோலிய காலஞ்சென்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர் **திரு.சு.இரத்தினராசா** அவர்களின் குடும்பத்தினருக்கும் தீவகக் கல்விப் பணிப்பாளர் **உயர்திரு.ப.விக்கினேஸ்வரன்** அவர்களுக்கும் என்ஞான்றும் நன்றியுடையேன்.

**திரு.V.A.சிவராசா**

அதிபர் தரம் 2:II

மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலயம்.,
ஊர்காவற்றுறை.

*விளம்பர அன்பளிப்பு:*

***ஈஸ்வரி மரக்காலை,***
*பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி.* (94760)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


அராலி தெற்கு களவத்துறை ஞானவைரவர் ஆலயம்
மேற்படி எமது ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு மீண்டும் ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கித் தந்துதவிய,



மாண்புமிகு அமைச்சர்
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**உயர்திரு. கே.வி. குகேந்திரன் *(ஜெகன்)***
அவர்களையும்



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு. ந. திரிலோகநாதன்**
அவர்களையும்

நன்றியுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*அராலி தெற்கு.* பரிபாலன சபையினர்.
*அராலி.* (94748) களவத்துறை ஞானவைரவர் ஆலயம்.



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம், பிரமனாச்சி தோட்டம்*

மேற்படி ஆலய கட்டடத் திருப்பணி வேலைகளுக்காக ரூபா 2,00,000/- ஒதுக்கீடு செய்து அதிலிருந்து 1,00,000/- ரூபாவை எமக்கு உடன் வழங்கி உதவியவர்களான,



இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
உயர்திரு. **கே. வி. குகேந்திரன (ஜெகன்)**
அவர்களையும்

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு. **ந. திரிலோகநாதன்** அவர்களையும்

(94749)

நன்றியுணர்வுடன் வாழ்த்துவதோடு, அவர்கள் பணி மேலும் சிறக்க கற்பகப் பிள்ளையார் கழல் போற்றுகின்றோம்.

*வட்டு. வடக்கு, சித்தன்கேணி.* - **ஆலய பரிபாலன சபையினர்.**


### குடாநாட்டுக்குள் 41 ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிவரும் 41 ஆசிரியர்களுக்கு வலயமட்டத்திலான இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 41 பேரும் ஜனவரி மாதம் முதலாம்திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள வலயப பாடசாலைகளில் தமது கடமைகளை ஏற்றுக்கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார். (க-10-ரி)

### முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,நவ.22

தென்மராட்சி மற்றும் பளை பிரதேசசெயலகப் பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

### 'கடற்சொறி'யின் தாக்கத்துக்குள்ளான மீனவருக்கு 'எரிகாயம்'

யாழ்ப்பாணம்,நவ.22

கடற்சொறிபட்டு அதன் தாக்கத்திற்குள்ளான ஒருவர் மூச்சுத் திணறி, மயக்கமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை நிகழ்ந்த இச்சம்பவத்தில் தொழிலாளியான கற்கோவளத்தைச் சேர்ந்த சாந்தன் செல்வவிநாயகம் (வயது29) என்ற இந்த நபர், தற்போது 'எரிகாயங்'களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மழை காலத்தில் கடற்சொறி (ஒருவித அழுகல் பாசி) கரையொதுங்குவதாகவும், இந்தப்பாசி உடம்பில் பட்டதும் அந்த இடங்கள் எரிகாயங்கள்போல் காணப்பட்டு தோல் உரிந்து பெரும் வேதனையை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-15-117)


## தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக CEFE அலகானது GTZ/JRP மற்றும் தொழில்துறைத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் ஒன்பதாவது தொழில் முயற்சியாண்மைப் பயிற்சிக்கு புதிதாக தொழில்முயற்சியை ஆரம்பிக்க விரும்புவோரிடமிருந்தும், ஏற்கனவே தொழில்முயற்சியை கொண்டுநடத்திக்கொண்டிருப்பவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிக்காலம் 14 நாள்களாகும். பயிற்சிப் பதிவுக் கட்டணம் ரூபா 1000/- மட்டுமே. விண்ணப்ப முடிவு திகதி 06-12-2001. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்: GTZ/யாழ்ப்பாணப் புனரமைப்புச் செயற்திட்டம், 11, கண்டி வீதி, யாழ்ப்பாணம்; கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வடமாகாண அலுவலகம், தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பும் முகவரி: இணைப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக CEFE அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

University of Jaffna | GTZ/Jaffna Rehabilitation Project | Srilanka - German CEFE Programe | Department of Industries | Industrial Developement Board

(C/19397)



## Wanted an Apartment

Wanted a First Floor Apartment with all modern amenities for a chief executive of an International organization preferably around Temple Road, Jaffna near International non Goverment organizations.

**Advt.No 1401,**
**C/o Uthayan,**
**Jaffna.**

(94735)



லண்டன்

## சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம்

கந்தரோடையில் அமையும் சிவயோகம் அன்னையர் குடியிருப்பில் 5 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் விதவைப் பெண்களுக்கு இவ்வில்லங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரிகளின் உச்ச வறுமை, குடும்பப் பொறுப்பு யாவும் கருத்திற் கொண்டு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

☆ *விண்ணப்பதாரிகள் தமது குடும்ப விவரம் யாவும் அமைந்த வகையில் விண்ணப்பிக்கவும்.*

☆ *தமது குடும்பநிலை குறித்து கிராம அலுவலரின் அத்தாட்சியுடன் விண்ணப்பிக்கவும்.*

**விண்ணப்ப முடிவு திகதி - 15.12.2001**

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-*

**'நம்பிக்கைப் பொறுப்பாளர்'**
**சிவயோகம் அன்னையர் குடியிருப்பு,**
**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**விளம்பர அன்பளிப்பு - ஆறு.திருமுருகன்** (94759)



**கொடிகாமம் பனை தென்னை வள அ.கூ.சங்கம் (வ.து)**

## முக்கிய அறிவித்தல்

**தென்மராட்சியில் உள்ள அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களை இன்று (22.11.2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தென்மராட்சி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் நேற்றைய சந்திப்பின்போது அங்கத்தவர்களுக்கு தெரிவிக்குமாறு அறிவித்துள்ளார்.**

**2000ஆம் ஆண்டு தொழிற்பட்ட அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொண்டு கொடுப்பனவு சம்பந்தமான விடயத்தை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

*ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*கொடிகாமம்.* (94752) - பொது முகாமையாளர்.


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பு இரத்தினம்

ஓட்டகப்புலம், வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, கைத்தொழில் பேட்டை வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பு இரத்தினம் நேற்றுமுன்தினம் 20.11.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி (மணி - ஜேர்மனி), பாலேந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும்; காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (ஆசிரியர்) மற்றும் றோஸ்மலர் (வசந்தி) ஆகியோரின் அருமை மாமியாரும்; காலஞ்சென்றவர்களான வைத்தியாம்பிள்ளை, இராயப்பு, பேரின்பநாயகம் மற்றும் அமிர்தநாயகம், பிலோமினா (ஜேர்மனி), எலிசம்மா ஆகியோரின் சகோதரியும், பவானி - ராஜ் (லண்டன்), பாமினி - உதயகுமாரன் (ஜேர்மனி), காந்தராஜ் - வினோதினி (பிரான்ஸ்), அன்ரன்பிரான்சிஸ் - சைலஜா, சுயாதா (கொழும்பு), அன்ரன் ரஜீவ் (யாழ்.இந்துக் கல்லூரி - 2003, வர்த்தகப் பிரிவு) ஆகியோரின் பேர்த்தியும், வசந்த், சுயா, சரண், அஞ்சலி, ஸ்ரெபான், ஜனு ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.11.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலியின் பின் அச்சுவேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி.பாலேந்திரா
(மகன்)

*கைத்தொழிற்பேட்டை வீதி,*
*தென்மூலை, அச்சுவேலி.* (94751)

# மண் மீட்பா? மக்களின் வாழ்க்கையா? தீர்மானிக்கும் தருணம் வந்துவிட்டது!

## ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.22

மண்மீட்பா? மக்களின் வாழ்க்கையா? எது முக்கியம் என்பதைத் தீர்மானிக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது என்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் விடுக்கப்பட்டு - நேற்றைய உதயனில் பிரசுரமான - அறிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையில் ஈ.பி.டி.பியினால் "நிதானமாகச் சிந்தித்து, விவேகமாக முடிவெடுங்கள்" என்ற தலைப்பில் நேற்று அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

### எது முக்கியம்?

தேர்தல் என்பது வெறுமனே ஒரு நாள் திருவிழா அல்ல. காகிதத்தில் புள்ளடி போட்டுவிட்டு ஒதுங்கும் விடயமுமல்ல. மாறாக, மக்களின் நாளாந்த வாழ்க்கை செல்லும் திசையைத் தீர்மானிக்கும் கருவி; அடுத்து வரும் காலங்களுக்கு திசைகாட்டி; இனிவரும் நாள்கள் தொடர்பாக எழுதப்படும் தலைவிதி. எனவே தேர்தலில் வாக்களிக்கும் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நிதானமாகச் சிந்தித்து விவேகமான முடிவெடுத்து வெளிப்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

மண்மீட்பா? மக்களின் வாழ்க்கையா? எது முக்கியம் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. 'மண்ணை மீட்கப் போகிறோம்!', 'உரிமைகளை நிலைநாட்ட உரத்துக் குரல் கொடுக்கப்போகிறோம்!!' என்றெல்லாம் கூறிக்கொள்ளும் வாய்ச்சொல் வீரர்களை நம்பி, உங்கள் பிள்ளைகளையும், உற்றவர் மற்றும் உறவினர்களையும் தொடரும் யுத்தத்துக்கு பலிக்கடாக்களாக்கலாமா? எந்தவிதமான அர்ப்பணிப்பும் இல்லாமல் அடுத்தவர்களின் மரணத்தை வீரம் என்று பாராட்டும் கபடங்கள் சரியானதா? தத்தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றாமல் மாற்றார் மீது வசைபாடி, வாக்குவேட்டை நடத்தும் விபரீதங்கள் நியாயமானதா? உரிமைகளுக்கே முதலிடம் என்று ஓங்கிக் குரல்கொடுப்பவர்கள் போர் முனைகளுக்குச் செல்லாமல் புத்தகங்களின் பக்கங்களுக்குள் முகம் புதைத்தபடி மற்றவர்களைப் போர்க்களம் செல்லத் தூண்டுவது பொருத்தமானதா? எண்ணிப் பாருங்கள்.

### போரின் விளைவு என்ன?

கந்தளாய், கல்லோயா போன்ற எல்லைப்புறக் கிராமங்கள் பறிபோவதாகக் கவலைப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட போரின் இன்றைய விளைவு என்ன? காங்கேசன்துறை மீள் குடியமர்வுக்கு அனுமதி கிட்டாத நிலைமையும், தென்மராட்சி மீள் குடியமர்வுக்கு அனுமதி மறுக்கப்படும் நிலையுமாகத்தானே நீடிக்கிறது? இப்படி இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு அழிவுகளைச் சுமந்தபடி வாழ முடியும்? எண்ணிப் பாருங்கள்,

பதினொரு லட்சத்தையும் கடந்திருந்த குடாநாட்டின் சனத்தொகை நான்கரை லட்சத்துக்குள் குறுகிவிட்டதே. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவும் ஆளில்லாமல் அவலப்படும் நிலைதானே சாதாரண மக்களுக்கு வாய்த்துள்ளது. கவனிப்பாரற்ற முதியவர்கள், விதவைகளான இளம் பெண்கள், அநாதைகளான சிறுவர்கள் என்று பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டவர்களாக மக்கள் தொடர்ந்து அவலங்களுக்குள்தான் வாழ வேண்டுமா? இவை பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் யுத்தம் வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகிறது என்று புளகாங்கிதப்பட்டுக் கொண்டிருக்க இயலுமா?

### மக்களின் வாழ்வே முக்கியமானது

உரிமைப் பிரச்சினைதான் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினை எனக் கூறிக்கொண்டு, உரிமைப் பிரச்சினை தீர்வுக்கு வரும்வரையில் அன்றாட வாழ்வின் அவலங்கள் தொடர்வதை அனுமதித்தபடி வாய்மூடி மௌனிகளாக மக்கள் வாழ வேண்டும்;. தொடரும் சங்கடங்களை சமாளித்துக்கொள்ளத்தான் வேண்டுமென்று எதிர்பார்ப்பது எப்படி.

எனவேதான் மண்மீட்பு என்பதைவிடவும் மக்களின் வாழ்வு முக்கியமானதாகிறது. மக்கள் நாளாந்த வாழ்க்கையைத் துன்பங்கள் இல்லாமல் தொடரும் வகையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; இடம்பெயரும் அவலங்களுக்கும் அகதிகளாக இடத்துக்கு இடம் அலையும் நிலைமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்; எந்தவிதமான இடையூறும் இல்லாமல் சொந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழும் சுகம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்; அச்சுறுத்தல்கள் அகன்ற, ஜனநாயகச் சூழல் தோன்ற வேண்டும்; விளக்கை நாடிச்சென்று மடியும் விட்டில் பூச்சிகளாகத் தொடர்ந்து சாவுகளையே அரவணைக்கும் போக்கிற்கு விடைகொடுக்க வேண்டும்.

### எதிர்ப்புக் காட்டுவோரை எதிர்ப்போம்

சோறா? சுதந்திரமா? என்று வீரம் பேசியவர்கள் சோற்றையும் நிம்மதியாகச் சாப்பிடவில்லை; சுதந்திரத்தையும் பெற்றுத்தரவில்லை. இப்போது கிடைக்கின்ற கஞ்சியையும் தட்டிக்கொட்டிவிட முனைப்பாகப் பாடுபடுகின்றனர். நிரந்தரமில்லாத வேலைவாய்ப்புக்கள் என்றும் - பயனளிக்காத அபிவிருத்தித் திட்டங்கள் என்றும் - உங்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொச்சைப்படுத்துகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் குடியமரவும் எதிர்ப்பு; அகதி முகாம்களில் வாழ்பவர்களுக்காக வீடமைக்கவும் எதிர்ப்பு; வீதிகள், பாடசாலைகள், ஆலயங்கள் புனரமைப்புச் செய்வதற்கும் எதிர்ப்பு. இப்படி ஒவ்வொன்றிற்கும் எதிர்ப்புக் காட்டுபவர்கள் உங்கள் பிரதிநிதிகளாக உலா வருவதற்கு நீங்கள் எதிர்ப்புக் காட்ட வேண்டாமா? அதற்காக உங்கள் வாக்குகளைப் பயன்படுத்துங்கள்.

## கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் விசேட கூட்டம் இன்று மாலை 5.45 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனைத்து மத்தியஸ்தர்களையும் இந்தக் கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-7)


பொதுத் தேர்தல் - 2001
ஐக்கிய தேசியக் கட்சியின்
கொள்கை விளக்கமும் பிரசாரக் கூட்டமும்

காலம் :- இன்று 22-11-2001 பிற்பகல் 4 மணி
இடம் :- நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றில்.
தலைமை:- சி.கணபதிப்பிள்ளை
(ஐ.தே.கட்சி - உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளர்)
ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்
திரு.தி.மகேஸ்வரன்
[யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்]
சிறப்புரையாற்றுவார்.

ஐக்கிய தேசியக் கட்சி,
யாழ்.மாவட்டம்.
(C/19398)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. ந.இராசதுரை
(Sp. Trd. Science, SLPS 2 - II)

எமது பாடசாலை அதிபரும், ஊர்காவற்றுறை அறிவாளி சனசமூக நிலையத் தலைவரும், புங்குடுதீவு பாணாவோடை சிவன் தேவஸ்தான பரிபாலன சபைப் பொருளாளருமாகிய திரு.ந.இராசதுரை அவர்கள் 2000.08.04 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் தரம் 2 - IIக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன் அவர் தனது சேவையில் மேன்மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.
ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(94764)



ராஜா யாழ்ப்பாணம்
கமல், மனீஷா மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.30, 2, 5 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (புதிய நேரம்)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
(C/19321)

நிரஞ்சனாஸ் சங்கானை
THE PLOT (ஆங்கிலம்)
இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்.
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C/19383)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, பிரபு, கௌதமி, சோ நடித்த
குரு சிஷ்யன்
(ரீஸ்டீஸ்)
காட்சிகள்:- 11.00, 3.00 (புதிய நேரம்)
(94754)


## ஊரெழுவில் கொடூரம்

# 7வயதுச் சிறுமி மீது பாலியல்வல்லுறவு!

யாழ்ப்பாணம்,நவ.22

இளைஞர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 7வயதுச் சிறுமி ஒருத்தி நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்து ஊரெழுப் பகுதியில் வசித்து வரும் சிறுமியே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை முடிந்து தனியாக வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் ஊரெழு கிழக்கில் உள்ள ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில் வைத்து சிறுமியை இடைமறித்த இரு இளைஞர்களில் ஒருவர் அருகில் உள்ள பற்றைக்குள் சிறுமியை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்பட்டது.

இதேவேளை -

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் - ஊரெழுப் பகுதியைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலீஸாரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.(ம-7-15)

## கடந்த மாதம் கைதான

# கோப்பாய் மாணவன் நேற்று விடுதலை!

யாழ்ப்பாணம்,நவ.22

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இருபாலையைச் சேர்ந்த சாந்திராஜ் டிரோசன் என்ற இந்த மாணவனை சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ். நீதிவான் ஆர். ரி.விக்னராஜா நேற்று விடுதலை செய்தார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி வீட்டில் வைத்து இவரை பொலீஸார் கைது செய்திருந்தனர். இவரது வீட்டுக் கிணற்றடியில் இருந்து தாம் கைக்குண்டு ஒன்றை மீட்டதாகவும் பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இதனால் சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலை எதிர்பார்த்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவரை விடுவிக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவுறுத்தல் கிடைத்தது. இதனை அடுத்து யாழ். சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றுக்கு உடனடியாக அழைக்கப்பட்ட இந்த இளைஞர், அங்கு நீதிவான் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

(ம-6-10)

# கல்முனைக்குடியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

மட்டக்களப்பு,நவ.22

கடந்த திங்களன்று கல்முனைக்குடியில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பொ.ஐ.முன்னணி ஆகியவற்றின் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதல்களுக்குக் காரணமானவர்களைக் கைதுசெய்யக் கோரி நேற்று கல்முனைக்குடியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகளில் கம்பிவேலிகள் கட்டப்பட்டு டயர்கள் எரிக்கப்பட்டன. வீதிகளின் குறுக்கே பாரிய மரக் குற்றிகளும் போடப்பட்டு போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. கடைகள் மூடப்பட்டிருந்தன.

அம்பாறை மாவட்டம் முழுவதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும் கல்முனைக்குடியில் மட்டுமே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பகல் 11.00 மணியளவில் கல்முனைக்குடியில் வீதித் தடைகள் யாவும் பொதுமக்களின் உதவியுடன் விசேட அதிரடிப்படையினரால் அகற்றப்பட்டன.

இதனையடுத்து அங்கு வாகனப் போக்குவரத்து ஓரளவுக்குச் சீரானது. (ம)

## பாடசாலை விடுமுறை

யாழ்ப்பாணம்,நவ.22

அரசாங்கப் பாடசாலைகள் யாவும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை மூடப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும். (க-10-ரி)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.22

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் நவமலர் கனகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பாராட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும் -

லயன் ஆர். நடராஜா, லயன் ஏநல்லதம்பி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கம் ஆகியோர் கௌரவ, சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியர் கௌரவப் பேச்சாளராகக் கலந்துகொள்வார். (ம-7-139)


மரண அறிவித்தல்

திருமதி லீலாவதி கந்தசாமி

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி கந்தசாமி நேற்று (21.11.2001) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், சுவேனி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), குமணன் (B.Sc.), குணாளன் (அறிவிப்பாளர், சக்தி F.M. Radio, கொழும்பு), வேதராணி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 70/11, அரசடி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க.குமணன்
(மகன்)

(94763)

# றெஜி ரணதுங்கவுக்கு பிணை அனுமதி

ஐ.தே.கட்சி ஆதரவாளர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் றெஜி ரணதுங்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பதினைந்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரு ஆள்களின் உறுதிப் பிணையிலும் அவரை விடுவிப்பதற்கு கம்பஹா மேல்நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் சில்வா அனுமதியளித்தார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் பொலீஸ் நிலையத்துக்கு அவர் சமுகம் தர வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தாக்குதலுக்கு இலக்கான ஐ.தே. கட்சி ஆதரவாளர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்ததை அடுத்து, றெஜி ரணதுங்க கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில், அவர் சுகயீனம் என்று தெரிவித்து தனியார் மருத்துவமனை ஒன்றில் தம்மை அனுமதித்துக் கொண்டார்.

அவரைக் கைது செய்து நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிமன்றம் பின்னர் உத்தரவிட்டதையடுத்து - அவர் அனுமதிக்கப்பட்ட ஆஸ்பத்திரியில் நீதிமன்றக் காவலுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட ஐ.தே.க. ஆதரவாளர் தாக்கப்பட்ட சமயம், அந்த இடத்தில் றெஜி ரணதுங்க இருந்ததைத் தாம் கண்டதாக முதலில் சாட்சியமளித்த சாட்சி ஒருவர் பின்னர் தமது முதல் சாட்சியத்திலிருந்து 'பல்டி' அடித்து, அந்த இடத்தில் றெஜி ரணதுங்கவைத் தான் காணவே இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

முக்கிய சாட்சியின் இந்தக் குளறுபடி, றெஜி ரணதுங்க விரைவில் பிணை அனுமதி பெற வாய்ப்பாகி விட்டதாகச் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (உ)

# மெய்வன்மைத் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான பரீட்சை

மெய்வன்மை நிகழ்ச்சிகளின் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான - இரண்டாம், மூன்றாம் தரநிலை உயர்வுகளுக்குரிய - பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் மெய்வன்மைத் தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கமே இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

1999 ஆம் ஆண்டுப் பரீட்சையில் சித்தி எய்தியோர் தரம் III இற்கான தர உயர்வுப் பரீட்சைக்கும் -

1995 அல்லது அதற்கு முன்னர் சுவட்டு மற்றும் மைதான நடுவர்களுக்கான பரீட்சைகளில் சித்தியடைந்தோர் தரம் II இற்கான தர உயர்வுப் பரீட்சைக்கும் -

தோற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப இறுதிநாள் இம்மாதம் 30 ஆம் திகதியாகும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள அருணன்ஸ் ஸ்போட் ஸ்பொட்டில், யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் கப்டன் என், சோமசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நடந்துமுடிந்த பரீட்சையில் சித்திபெற்றோர் தமக்குரிய சான்றிதழ்களை தாங்களே நேரடியாகச் சமுகம் தந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் கப்டன் சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். (உ)

## கூடைப்பந்தாட்டம்

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு :-

**பெண்கள் பிரிவு**

பல்கலைக்கழக அணி எதிர் அரியாலை வி.க.அணி.

**ஆண்கள் பிரிவு**

பல்கலைக்கழக (கோல்ட்ஸ்) அணி எதிர் யாழ்ப்பாணம் (புளூஸ்) அணி. (ம)

யா/வடமராட்சி
மத்திய மகளிர் கல்லூரி
முதல்வர்
திருமதி விஜயலக்சுமி சுகுமாரன்
அதிபர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமை கண்டு
பூத்த மலர்கள்
☆ தலைமைத்துவம் பூரிப்படைகின்றது.
☆ ஆளுமை கூர்ப்படைகின்றது.
☆ ஆசிரியத்துவம் இலக்கியம் காணுகின்றது.
☆ கல்லூரித்துவம் சங்கமமாகின்றது.
எம் முதல்வர்
திருவுங் கல்வியும் மேன்மேலும் பெற்றுயர இறைவனை வேண்டி நிற்கும்.
- கல்லூரிச் சமூகம்.
(94753)

## வாழைச்சேனையில் ஆயுதக் குழு அட்டகாசம்

மட்டக்களப்பு,நவ.22

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்று அதிகாலை இனந் தெரியாத ஆயுதக்குழு ஒன்று பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டது.

வாழைச்சேனையில் உள்ள பொ.ஐ.முன்னணி வேட்பாளரான எம்.எஸ்.முஹம்மது தம்பியின் அலுவலகம் இக்குழுவால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை ஆசிரியர் ஏஜிபின் தௌஸ், தேசிய நீர் வடிகாலமைப்புச் சபையின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.எல்.எம்.முபாரக் ஆகியோரது வீடுகளுக்குள் சென்ற இந்தக் குழு, வீட்டிலிருந்தவர்களைத் தாக்கியதுடன் அங்கிருந்த பெறுமதியான தளபாடங்களையும் சேதமாக்கியது. (ம-6)

## ஏறாவூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல் சிதறி அவர் பலியானார்.

மொத்தம் ஆறு வீடுகள் இந்த ஷெல் தாக்குதலினால் கடும் சேதமடைந்தன.

ஏறாவூர் 5ஆம் டிவிஷனில் மற்றொரு வீட்டின் கூரையின் திராந்தியில் பட்டு ஷெல் வெடித்துள்ளது. வீட்டுக்குள் இருந்த பதினொரு பேர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். (உ)


## ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்கும் பொதுமக்களை ஏமாற்றுவதற்குமாகவே ஈ.பி.டி.பி. இத்தகைய அறிவிப்பை விடுத்திருக்கின்றது.

பொதுத்தேர்தலின் பின்னர் அமையப்போகும் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் ஈபிடிபியைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை எமக்கு ஏற்படாது.

எனவே எமது அரசில் வடக்குப் பிரதேச புனர்வாழ்வுக்கும், அபிவிருத்திக்கும் பொறுப்பாக நியமிக்கப்படவிருக்கும் எமது யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரனின் கரங்களைப் பலப்படுத்துமாறு வடபகுதி மக்களைக் கோருகின்றேன். - என்றுள்ளது. (உ)

புதிய வகுப்புகள் ஆரம்பம்
வங்கி, அரச அலுவலர்களுக்கான மாலை நேர வகுப்புகள்
ஆரம்பம்
22-11-2001 இன்று
மாலை 6.30 மணி

Internet & Email
பிரிவு 3
ஆரம்பம்
25-11-2001
ஞாயிறு
காலை 10.00
STP TP: 2674
E.Mail stpedu@sltnet.lk

புலிகளின் தாக்குதலை முறியடிப்பது குறித்து

# திருமலைக் கடலில் கடற்படை ஒத்திகை

திருகோணமலை,நவ.22

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எவ்வாறு முறியடிப்பது என்பது குறித்து திருகோணமலைக் கடலில் கடற்படையினர் நேற்று பெரும் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திருகோணமலை - ஹெவிலியா கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணி முதல் இந்த ஒத்திகை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

திருகோணமலைத் துறைமுகம் அடிக்கடி புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி வருவதையடுத்து, இந்த ஒத்திகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஒத்திகையின்போது அப்பகுதிக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஐந்து மீனவர்கள் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ம)

# இரு கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**ஈ.பி.டி.பி. அறிக்கை**

"வட்டுக்கோட்டைப் பகுதியில் ஈபிடிபியினர் மீது தாக்குதல்" என்ற தலைப்பில் இவ்விடயம் சம்பந்தமாக ஈபிடிபி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

வட்டுக்கோட்டைப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பியின் ஆதரவாளர்கள் மீது மகேஸ்வரனுக்கு ஆதரவான குண்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியிலுள்ள சங்கரத்தைச் சந்திக்கு சமீபமாக, வீடு வீடாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஈபிடிபி ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்களை குண்டர்கள் கடுமையான தூஷண வார்த்தைகளால் ஏசினர். சுமார் நூற்றுக்கும் அதிகமான குண்டர்கள் குடிபோதையில் திரண்டுவந்து, ஈ.பி.டி.பி. தொண்டர்கள்மீது தாக்குதல் நடத்தினர். இரும்புக் கம்பிகள், கத்திகள், வாள்கள் என்பன சகிதமாக நடத்திய தாக்குதலில் ஈபிடிபியின் உறுப்பினரான துரைராசா தமிழ்ராஜன் என்பவர் காயமடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அண்மையில் இருக்கும் படை முகாமிலிருந்து வந்த படையினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து குண்டர்கள் சிதறி ஓடினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஐ.தே.கட்சி கூறுவது**

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் கூறியதாவது:-

நேற்றுக்காலை முதல் ஈபிடிபியின் பிரதேச சபைத் தலைவர்களான திரிலோகநாதன், வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், மகேந்திரராசா ஆகியோர் தலைமையில் இலக்கத்தகடு இல்லாத மூன்று 'பிக்-அப்' வாகனங்களில் ஈ.பி.டி.பி. கோஷ்டி ஒன்று அராலி முதல் சித்தன்கேணி வரையான பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த ஐ.தே.க. சுவரொட்டிகளைக் கிழித்தும், கறுப்பு மை பூசியும், அந்தச் சுவரொட்டிகளுக்கு மேலே தமது கட்சி சுவரொட்டிகளை ஒட்டியும் அடாவடித்தனம் பண்ணிக்கொண்டு வந்தது. அவர்களுக்கு ஏவலாள்களாக ஒரு லொறியில் சுமார் ஐம்பது சமுர்த்தி மற்றும் அபிவிருத்தித் தொண்டர்கள் வந்தனர்.

அந்தக் கோஷ்டியின் முக்கியஸ்தர்களின் கைகளில் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களும் இருந்தன.

அவர்களது அடாவடித்தனத்தைப் பொறுக்கமுடியாத சித்தன்கேணி, மாவடி, வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதி மக்கள் சங்கரத்தையில் திரண்டனர்.

ஈபிடிபி கோஷ்டியின் அடாவடித்தனத்தைப் பொதுமக்கள் தடுக்க முற்பட்டபோது ஈ.பி.டி.பி. பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஆயுதத்தை நோக்கிச் சுட்டார். மக்களுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

மக்கள் திரண்டு வந்ததால் ஈ.பி.டி.பியினர் ஓட்டம் பிடித்தனர். அருகில் உள்ள மாவடி இராணுவமுகாமில் புகுந்தனர். அப்படி ஓடியபோதே அவர்களில் ஒருவர் வீழ்ந்து காயமடைந்ததாகத் தெரியவந்தது.

அவ்வழியில் பதற்றம் உருவாகுவது பற்றிய தகவல் எனக்குக் கிடைத்ததுமே நான் மானிப்பாய் பொலீஸ் நிலையத்துக்கு அறிவித்தேன். அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஈபிடிபியினரிடமிருந்து சில துப்பாக்கிகளை அவர்கள் கைப்பற்றியதாக அறிகிறேன். - என்றார் மகேஸ்வரன். (உ)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டல்களை ஒற்றுக்கேட்டதில் இது தெரியவந்துள்ளது.

இந்த உரையாடல்களில் "ஒற்றைக் கண் போகிறார்" என்று கூறப்பட்டது. அதில் ஒற்றைக் கண் என்று அவர் குறிப்பிட்டது ஜனாதிபதியைத்தான் - என்றார்.

ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கூட்டு உள்ளது என்று தெரிவித்த அமைச்சர், அதற்கு ஆதாரமாக 'தமிழ் நெற்', 'தமிழ்க் கார்டியன்' ஆகிய செய்தி ஊடகங்களில் வந்த கட்டுரைகளை இதற்கு ஆதாரமாகக் காட்டினார். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருடன் பேசியதாகக் கூறப்படும் ஒலி நாடா ஒன்றையும் அமைச்சர் செய்தியாளர்களுக்குப் போட்டுக் காட்டினார்.(ம)


தமிழ் தேசிய இனப்பிரச்சினையில் ஆழ்ந்த புலமை
இருபத்தைந்து வருட கால அரசியல் அனுபவம்
ராஜதந்திரிகளுடன் நீண்ட பரிச்சயம்
சர்வதேச அரங்கில் தமிழரின் உரிமைக்குரல் ஓங்கி ஒலித்திட
ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!
சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழர் விடுதலைக் கூட்டணி
சின்னம்
இலக்கம் 4


உண்மையான சுதந்திரமும், சகோதரத்துவமும்,
சமாதானமும் மலர மீன் சின்னத்துக்கு
வாக்களியுங்கள்
தம்பிராஜா சுபத்திரன்
(றொபேட்)
சுயேச்சைக்குழு
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
(93949)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2001இல், அச்சிட்டு வெளியிடப்பெற்றது.